திருவள்ளுவர்
ஆண்டு 2006
ஆனி
1975 ஜூன்

அருளோசை

சமய பாட போதனைத் திங்களிதழ்

உ

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி.



தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை,
ஆண்டுச் சந்தா ரூ.5] சென்னை-600018 [தொலைபேசி : 7682

உ

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழனி

பழனி ஞானதண்டாயுதபாணியைப் பணிந்திட வாரீர்!
அழகான திருமுருகன் அருள் பெறவே திரண்டு வாரீர்!
செந்தேனும் பாலும் மணக்கும் சேயோனை வழிபட வாரீர்!
சந்தன விபூதி மணக்கும் திருமேனி கண்டு மகிழ வாரீர்!

முடிக்காணிக்கை தரத் தனியிடம்!
தங்குவதற்கேற்ற வசதிகள்!
முதியவரும் முடியாதோரும் முருகன் அருகே செல்ல
இழுவை ரயில் வசதி!
பொங்கியெழும் பேரழகனைத் தாங்கிவரும் தங்கரதம்
காண வசதிகள்!

அத்தனையும் செய்து அழைக்கிறது பழனித் திருக்கோயில். தமிழ்க்கடவுளாம் கந்தப்பெருமானின் அருள்பெற்று, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் கண்காணிப்பில் கீழே கண்ட நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

1. அருள்மிகு பழனியாண்டவர் கலைக்கல்லூரி
2. அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி
3. அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
4. அருள்மிகு பழனியாண்டவர் செந்தமிழ்க் கல்லூரி
5. கார்த்திக்பள்ளி (ஆங்கிலப்போதனை)
6. செவிடர்பள்ளி
7. நாதசுரக் கல்லூரி
8. வேத ஆகமப்பாடசாலை
9. அன்புஇல்லம் (அனாதை விடுதி)
10. முதியோர் இல்லம்
11. குழந்தைகள் காப்பகம்
12. மருத்துவமனை

பழனித் திருமலையில் நாளும் பெருகிவரும் பக்தர்கட்குப் போதிய வசதிகள் செய்து தருவதற்காக 60 லட்சரூபாய் செலவில் மாபெரும் திருப்பணித் திட்டம் செயல்பட உள்ளது.

ஆர். அர்ச்சுனன், பி.ஏ.,
துணை ஆணையர்-நிர்வாக அதிகாரி

அருளோசை

சமய பாட போதனைத் திங்களிதழ்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு.

மணி 3	இராக்கத ஆனி 1975 ஜூன்	ஓசை 12

அருளோசை அன்பர்களுக்கு, வணக்கம்.

பேரவையின் திங்கள் வெளியீடான அருளோசை இத்திங்கள் இதழுடன் மூன்று ஆண்டு முடிவெய்துகிறது. இக்குழந்தை தளர் நடைப் பருவத்திலிருந்து அழகு நடை போடத் தொடங்குகிறது. நாலாவது ஆண்டு முதல் இப்போதுள்ள அளவை விடப் பெரிய அளவில் (கிரவுன்) அதிக பக்கங்களுடன் வெளிவரும்; படங்களும் இடம் பெறும். சமய தத்துவ விளக்கம், சிவன் திருமாலடியார்கள் வரலாறு, திருக்கோயில்களின் பெருமை, திருவுருவ உண்மை விளக்கங்கள், தத்துவ சமய சமூகத் தொடர்பான ஐயந்தெளிதல், வாசகர்கள் கருத்து (உரைகல்), சைவ வைணவ துதிப்பாடல் விளக்கங்கள், மகளிர் பகுதி, மாணவர் தொடர் எழுத்துப் பட்டி மன்றம், பேட்டி முதலிய சிறப்பியல்களுடன் புதிய பொலிவுடன் திகழ்ந்து விளங்கும் என்பதைப் பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்பர்கள் அருளோசையை அதிகமாகப் பயன்படுத்தி, அதன் வளர்ச்சிக்குத் துணை புரிவார்கள் என்று நம்புகிறோம்.

அ. நாராயணசுவாமி, பி.ஏ.,
பதிப்பாசிரியர்.

இந்த இதழில்

உலகில் மூன்று பெரிது எவை ?

நீங்கள் பதில் கூற நினேந்தவை
இருக்கின்றனவா என்பதற்கு
கீழே பார்க்கவும்

உலகில் மூன்று பெரிது

1. காலத்தாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது.

2. பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது

3. நிலேயில் திரியாது அடங்கியான்தோற்றம்
மலேயினும் மாணப் பெரிது

இவை சோழ மன்னன் கேள்விக்கு விடையாக எழுதியனுப்பியவர் இளேஞர் அருள்மொழித்தேவர். பின்னர் சேக்கிழார் என்ற பெயருடன் சோழ நாட்டு முதல் அமைச்சராக இருந்து, பெரிய புராணத்தை இயற்றியவர். இந்த நிகழ்ச்சியை, கம்பர்

"காவலவன் மண்ணில் கடலில் மலேயில் பெரிது எதுஎன
எண்ணி எழுதிக் கொடுத்த ஏற்றக்கை"

என்று திருக்கை வழக்கம் என்ற நூலில் சிறப்பித்திருக்கிருர்.

—மயிலேவாணன்.



திருவளர் செல்வ, நல்வாழ்த்துக்கள் !

உலகம் முன்னேயே இருக்கிறது. ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ்வொரு காரணம் இருந்தே ஆக வேண்டும். அது மட்டுமல்ல காரண நிலையிலும் காரியம் உண்டு. எந்த ஒரு பொருளும் உற்பத்திக்கு முன்பேயும் உளது என்ற சாங்கியரின் சற்காரிய வாதத்தைப் பற்றிச் சென்ற தடவை எழுதினேம். இந்த கருத்தை மறுக்க வேதாந்திகள் இறைவன் தன்னிடத்திலிருந்தே உலகத்தை தோற்றுவித்தான் என்று கூறுவர். இக்கருத்து சராசரி அறிவுக்குக் கூட ஒத்து வராது. ஏன்? காரியத்திலுள்ள இயல்புகள் காரணத்திலும் இருக்க வேண்டும். காரணத்தில் இல்லாத ஒரு தன்மை அல்லது இயல்பு காரியத்தில் இருக்காது.

இறைவன் ஓர் அறிவுப் பொருள். உலகம் ஒரு சடப் பொருள். அறிவுப் பொருளிலிருந்து எப்படிச் சடப் பொருள் தோன்ற முடியும்? ஓர் உயிரிலிருத்து பிறிதோர் உயிருள்ள பொருளே தோன்ற முடியும். உயிரற்ற பொருள் தோன்ற முடியாது. அறிவே வடிவமான இறைவனிடமிருந்து அறியாமை அல்லது அறியாமையுடைய பொருள் தோன்ற முடியாது என்று சாங்கியர் வாதாடுவர். வேதாந்திகளுக்கும் சாங்கியருக்கும் கூட சற்காரியவாதிகள் என்ற முறையில் ஒற்றுமை இருக்கிறது. ஆனலும் அவர்களுக்குள் மாறுபாடும் இருக்கிறது. சாங்கியர் காரணம் அப்படியே உண்மையாகவே காரியமாக மாறி விடுகிறது. அதாவது மண் பானையாக–பால் தயிராக மாறுகிறது அது போலப் பிரகிருதி உலகமாக மாறுகிறது என்பர். வேதாந்திகள் காரணம் காரியமாக உண்மையாகவே மாறுவதில்லை என்பர். அவர்கள் காட்டும் உதாரணம்: கயிறு காரணம், பாம்பு காரியம், கயிறு பாம்பு போலத் தோன்றுகிறதே உண்மையில் பாம்பாக மாறி விடுவதில்லை. அது போல பிரம்மமும் உலகமாகத் தோன்றுகிறது. ஆனல் உலகமாக மாறி விடவில்லை என்பதாகும்.

திருவளர் செல்வ, உண்மையில் இந்த உலகத்தின் இயல்புகளை ஆராய்தல் இவ்வுலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் எல்லையுடையவை. ஒன்றில் ஒன்று தங்கியவை. எல்லை என்று சொன்னால் எல்லைக்கு அப்பாலும் உண்டு என்பதும் பெறப்படுகிறது. எல்லை என்ற சொல் வழக்கு எல்லையில்லாமையையும் புலப்படுத்தும். ஒன்றில் ஒன்று தங்கும் பொருள் என்பதால் ஒன்றிலும் தங்காப் பொருளும் உண்டு என்பதை உணர்த்துகிறது. இக்குறிப்புக்கள் மூலப்பொருள் உண்டு என்பதற்குக் காரணங்கள். உலகின் பொருள் ஒவ்வொன்றும் இன்பம், துன்பம், இவ்விரண்டுமற்ற நிலை, ஆகியனவற்றைத் தருகின்றன. இம்மூன்று தன்மைகளுக்கும் இன்பம், துன்பம். இவ்விரண்டுமற்ற நிலைகளுக்கு நிலைக்களங்களான மூலப்பொருளும் முக்குணங்கள் ஆதல் வேண்டும். இந்த முக்குணமே உலகியலுக்குச் சுருதி. முக்குண வசப்பட்டோர் வையகத்தின் வரலாற்றை வளர்க்கின்றனர். முக்குணத்தை வென்றோர் வாழ்க்கையில் வெற்றி பெறுகின்றனர்.

திருவளர் செல்வ, முக்குணத்தின் இயல்பை அடுத்து எழுதுவோம்.

உ

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் 1954-ஆம் ஆண்டில் 'திருக்குறள் பாரதத்தின் தேசிய நூல்' ஆக வேண்டும் என்று அறிவித்தார்கள். அந்தக் கருத்து நாட்டில் கால்கொண்டு பரவி, இப்போது பாராளுமன்றத்திலும், மேடைகளிலும் முழக்கமிடப்பெற்று வருகிறது. அரசியல் தலைவர்களும், சான்றோர்களும் இக்கருத்தினை ஏற்று எழுதியும் பேசியும் வருகின்றனர். நடுவண் அரசு திருக்குறளைத், 'தேசிய நூல்' ஆக ஏற்றுக் கொள்ளும் நாள் ஒப்பற்ற திருநாளாகும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் எழுதும்

திருக்குறள் தேசீய நூல்

என்ற தொடர் கட்டுரை அடுத்த 'அருளோசை' இதழில் தொடங்குகிறது.



பத்தி-அருள்

(தவத்திரு. குன்றக்குடி அடிகளார்)

வாய்மை நெறியை முயன்று அடைதல் அரிது. பெற்ற வாய்மையைப் பேணிப் பாதுகாக்கத் துணை செய்வது பக்தி. பத்திமை என்பது முழு நிறை ஞானத்தில் தோன்றும்உணர்வு. உயிரினை இன்ப அன்பில் வளர்க்கும் உணவு, பத்தி, நிறைவில் விளையும் ஆக்கம். பத்திமையால் பழவினைகள் மாறும். நேற்றையத் துன்பங்கள் துடைத் தெறியப்படும். துன்பத்திற்குரிய காரணங்களும் அகற்றப்படும். நிகழ்கின்ற வினை அனைத்தும் தூய தவமாக அமைந்திருக்கும். ஆதலால் எதிர்வினை இல்லை. இந்நிலையிலேயே "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" என்ற முழக்கம் கேட்கிறது. துன்பத்திற்குத் காரணமாய் மாசுகளினின்றும் அதாவது அவாக்களினின்றும் அறவே விலகிய புலன்களே பத்திமையில் தோய்ந்த புலன்கள். ஆரூரர், தில்லையின் திரு நடனத்தை ஐந்து பேரறிவும் ஒரு நெறியில் நின்று வழிபாடு செய்த நிலையே பத்திமையின் முதிர்ந்த நிலை. பொறிகளும் புலன்களும் அருள் வழியால் தலைவன் வழியில் நிற்கும் பொழுது ஏது துன்பம்? எரிகின்ற நெருப்பில் குப்பைகள் விழுந்தால் நெருப்பு அணையாது. தூய்மை கெடாது. ஆனால், குப்பை எரியும். குப்பைகள் தூய்மையுறும். பத்திமையுடையோர் எங்கும் இறையருளைக் காண்பர்; எதிலும் இறையருளைக் காண்பர்; அவர்களுக்கு விருப்பும் இல்லை, வெறுப்பும் இல்லை, பகைவரும் இல்லை, நண்பரும் இல்லை. மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கித் தண்ணிர் ஒடி வருதைப் போலப் "பள்ளந்தாழ் உறுபுனலாகத் திருவருளை நோக்கியே தலைப்படுவர். செயல் செய்வர். பத்திமை என்பது செயலற்ற நிலையன்று. செயல் நிறைந்த நிலை. ஆனாலும் பத்திமையின் பாற்பட்டொழுகுவார் செய்யும் செயலில் இலாப நோக்கு இல்லை. புகழ் நாட்டமில்லை,

உயிர்கள் இன்புறுதலே நாட்டம் பத்திமையிற் பழுத்தவர்கள் வேற்றுமைகளை அகற்றுவர். ஒருமைப் பாட்டை வளர்ப்பர். அதுவே அருள் நெறி.

> வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
> யாண்டும் இடும்பை யில.

என்பார் வள்ளுவர். துன்பத்தின் பிறப்பிடமே வேண்டுதல் வேண்டாமை தான். உண்ணுதற்குத் தகுதியில்லாத கிழங்கை உண்ணும் நிலைக்குச் சுவையாக்கித் தருவது அவித்தல் தொழில். கிழங்கு அவித்தல், இட்டலி அவித்தல், இடியாப்பம் அவித்தல், என்ற சொல் வழக்கை அறிக. அதுபோல் தனக்கும் மற்றவர்களுக்கும் சுவையற்றவையாக—ஆனாலும் சுவையுடையன போல நடிக்கும் பொறிகளை அன்பில் நனைத்து அவித்தல் பத்திமை நெறி. ஐம்பொறிகளை அடக்குதல் என்பது பொருந்தா வழக்கு. இயலுவதும் அன்று. ஐம்பொறிகளைத் தன்னல வழியில் நாடிச் செல்லும் பொறிகளை மடை மாற்றிப் பத்திமையில்—அருள் வழியில் செலுத்துக என்பார் திருமூலர். உண்ணுதல் நாள்தோறும் நடைபெறும் கடமை. உண்ணுதற்காகவே வாழ்தல் விலங்கியல்பு. வாழ்தலுக்காக உண்பது வளர்ந்த நிலை. மற்றவர்களை வாழ்விக்க வாழ்தல் பத்திமையில் பழுத்த அருள்நிலை. மற்றவர்களை வாழ்விப்பதற்குரிய தொண்டு செய்ய உடல் நலம் வேண்டும் என்பதற்காக உண்பது அருள்நிலை. பொருளை இவறிக் கூட்டி எண்ணிச் சேர்ப்பதற்காக ஈட்டுவது அசுர குணம். இரப்பவர்க்கு ஈந்து உதவப் பொருள் வேண்டும் என்று ஈட்டுவது தவம். அறநெறி முயற்சி. பொறிகளை மற்றவர்களுக்குத் துன்பம் தாராமல் அவித்துப் பக்குவப் படுத்திய நிலையே அன்பு நிலை. இன்ப நிலை, அப்போதே இறைவன் அருள் அவர்கள் வாயிலாக வையத்திற்குக் கிடைக்கிறது. எல்லாச் செல்வத்திலும் மேற்பட்டது அருட் செல்வம்.

> "அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்"

என்பது வள்ளுவம். அருள் நெறியில் வையகம் வளரும் பொழுது துன்பம் தீரும். என்றும் இன்பம் பெருகும். குறைவிலாது உயிர்கள் வாழும். நீதி நிலவும். விண்ணகத்தை மண்ணகத்தில் காணலாம். அதுவே வள்ளுவர் வழி. அவ்வழியில் சென்று வாழ்க்கையாகிய மாளிகையைக் கட்டுவோம். அந்த மாளிகையில் நானிலத்தார் அனைவரும் ஒரு குலமாகக் கூடிக் கலந்துண்டு மகிழ்வோம்.

(முற்றும்)



துலை புக்க தொண்டர்

க. கலியாணம், எம்.ஏ., டிப். எக்கான்.,

சோழ நாட்டுத் தலைநகர் பழையாறை அப்பதியில் வழிவழி வணிகத் தொழில் புரிந்து வந்த குலத்தில் பிறந்த அமர்நீதியார் வதிந்தார். அடியவர்களுக்கு அமுதும், போர்வை, கீள், கோவணம், ஆடை முதலியனவும் அளித்து வருவாரயினர். பழையாறைக்கு அருகிலுள்ள திருநல்லூரில் திருவிழா நடைபெற்றது. அங்கு சென்று அமர்நீதியார் ஒரு திருமடத்தில் அமுது படைத்து வந்தார். சிவபெருமான் அவருக்கு அருள் புரிவான் திருவுளங் கொண்டு ஒரு அந்தணப் பிரமசாரி வடிவம் கொண்டு அமர்நீதியாரை அண்மினர். வந்தவரை வணங்கி வரவேற்றார் வணிகப் பெருமகனர். அவரும் "ஊணும் கோவணமும் நீர் கொடுக்கும் பான்மை கேட்டு உம்மைக் காண வந்தனம், நாம் நீராடி வரும் வரையில் நம்மிடமுள்ள இக்கோவணத்தைப் பாதுகாப்பாக வைத்திருந்து தாரும். கோவண முதலிய கொடுத்து வரும் உமக்கு இதன் பெருமையைக் கூற வேண்டுவதில்லை" என்று சொல்லிப் போய் விட்டார். அமர்நீதியாரும் அந்த கோவணத்தைப் பாதுகாப்பான இடத்தில் வைத்தார். மழை பொழிந்தது. போன வேதியர் நனைந்து கொண்டு திரும்பினர். வணிகரிடம் கொடுத்த உலர்ந்த கோவணத்தைக் கேட்டார். அவர் வைத்த இடத்தில் சென்று பார்த்த பொழுது அது காணப் பெறவில்லை. திகைத்துப் பயந்து வந்து புதிய கோவணம் கொடுப்பதாக மறையவரிடம் கூறினர். தாம் வைத்த கோவணம் தான் வேண்டுமென்று வற்புறுத்தினர் மறையவர் உருவில் மறைந்து வந்த இறைவன் "இந்த வாணிபம் அழகிது" என்று சொல்லிச் சினந்தார். தம்மிடமுள்ள இன்னெரு கோவணத்துக்கு எடைக்கு எடை கொடுத்தால் பெற்றுக் கொள்வதாகச் சொன்னர். துலாக்கோல் கொண்டு வரப் பெற்றது. ஒரு தட்டில் மறையவர் தண்டிலிருந்த கோவணத்தை வைத்தார் மற்றொரு தட்டில் அடியவர்க்காக வைத்திருந்த கோவணங்கள் ஒவ்வொன்ருக வைத்தார். அந்த தட்டு மேலேயே நின்றது. உலகில் இல்லாத மாயையாக இருக்கிறதே யென்று தாம் வாணிபத்திற்காக வைத்திருந்து துணி, நூல் முதலிய பொதிகள் அனைத்தையும் வைத்தார். தட்டு தாழவில்லை. தம்மிடமுள்ள பொன் மணி முதலிய எல்லாவற்றையும் இட்டார்.

அடியார் வைத்த கோவணத்திட்டு தாழ்ந்தே இருந்தது. அமர்நீதியார் தட்டு அதற்கு நேராக வரவில்லை. நிலைமை யறிந்த வணிகத் தொண்டர் கோவணக் கள்வரை நோக்கி "தலைவ! இத்துலையில் யானும் என் மனைவியும் சிறுவனும் ஏற அருள் புரிய வேண்டும்" என்று இறைஞ்சினார். இறைவனும் ஒருவாறு இசைந்தார். உடனே அமர்நீதியார் தம் மனைவி குழந்தையுடன் தராசுத் தட்டில் ஐந்தெழுத்து ஓதி ஏறினார். என்ன அதிசயம்! இரண்டு தட்டுகளும் ஒத்து நேர் நின்றன. அன்புத் தட்டுக்கு அருள் தட்டு ஒத்து வர வேண்டியதாயிற்று. வந்த அந்தணர் மறைந்தார். வான வீதியில் சிவமும் உமையுமாகக் காட்சியளித்தார். துலையே விமானமாகக் கொண்டு அம்மூவரும் வான் பதம் பெற்றனர்.

பழையாறை என்பது பெரு நகராக, சோழ நாட்டின் தலைநகரா சில காலம் இருந்த தென்பது வரலாறு கண்ட உண்மை. இப்போது ஒரு சிற்றூராகக் காட்சியளிக்கிறது. கும்பகோணத்துக்கு அருகில் இருக்கிறது. பழையாறை வடதளி என்றும் மேற்றளியென்றும் இரண்டு பகுதிகள் வடதளிக் கோயிலிலிருந்த சிவலிங்க மூர்த்தியைச் சமணர் மறைத்து விட்டனர். அது தெரிந்த அப்பர் பெருமான் "வண்ணங் கண்டும்மை வணங்கியன்றிப் போகேன்" என்று சொல்லி உண்ணாவிரதமிருந்தார். அதையறிந்த மன்னன் மூடியிருந்ததை அகற்றி அப்பர் வழிபடுமாறு செய்தான். முதல் சத்தியாக்கிரகியாகிய திருநாவுக்கரசர் உண்ணாவிரதம் இருந்த பெருமையுடையது பழையாறை.

திருவொற்றியூர்க் கோயிலிலுள்ள சோழர் காலத்துக்கு முற்பட்ட கல்வெட்டு ஒன்றில் அமர்நீதியார் என்ற பெயர் காணப்படுவதால் அமர்நீதிநாயனார் பெயரை மக்களுக்கிட்டு வழங்கும் பழக்கம் இருந்தது தெரிகிறது. எனவே இந்த நாயனாரும் மிகப் பழைய அடியார் என்பதும் தெளிவாகிறது.

அப்பரடிகள் திருநல்லூர்த் தேவாரத்தில் இந்த நாயனாரைச் சிறப்பித்துப் பாடியிருக்கிறார்.

நம்பியாண்டார் நம்பிகள் திருவந்தாதியில் அமர்நீதிநாயனாரும் அவர் மனைவியாரும் தராசுத் தட்டில் ஏறினார்கள் என்று கூறினார். சேக்கிழாரோ மனைவியுடன் சிறுவனும் ஏறியதாகக் கூறியிருக்கிறார். பழையாறைக்கு அருகிலுள்ள திருநாகேச்சரத்தில் வாழ்ந்த அமைச்சராகிய சேக்கிழார் பழையாறைக் கோயிலுக்கு அடிக்கடி சென்றிருக்க வேண்டும். அங்குள்ள சிற்பத்தில் மனைவி குழந்தையுடன் காணப் பெறுகிறது. அதை ஆதாரமாக வைத்தே சேக்கிழார் அமர்நீதியார் மனைவி சிறுவனுடன் துலைத் தட்டில் ஏறினார் என்று கூறியிருக்கிறார்.

இந்த நாயனார் திருநட்சத்திரமான பூரம், ஆனி 29 (13-7-74) அன்று வருகிறது. அதைக் கொண்டாட வேண்டியது நம் கடமை.

"அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்"

—சுந்தரர் திருத்தொண்டத்தொகை.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

" திருவடி "

சீலத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளியது

குறிப்பு:—இக்கட்டுரைப் பொருள் ஞான பூஜாநுபவம் உடையார்க்கு முழு இன்பம் விளக்கும்.

தமிழர்க்கு நெடுங்காலமாக இருந்து வரும் பொருள்கள் அளப்பரும் பெருமையும் அருமையும் உடையன. அவற்றுள் நாளடைவில் மறைவனவும் விளங்காதொழிவனவுமாயின பல. அவை தமிழர்க்கு இழப்பாகின்றன. தமிழ்ச் சொற்களுள்ளும் அந்நிலைமை உண்டு. சங்கத் தமிழ்ச் சொற்களுள் பற்பல அக்காலத் தமிழர் உணர்ச்சியில் இருந்த கருத்தை இக்காலத்திற் கொள்ள மாட்டாத நிலையின ஆயின. எடுத்துக் காட்டாக ஒரு சொல் இதில் விளக்கப்படும்.

'தாள்' என்னுஞ் சொல்லை அறியாத் தமிழன் ஒருவனும் இரான். (தாள் + அடி =) தாளடி எனச் சேர்த்து வழங்கும் உழவரை இன்றும் அறியலாம்.

'தாள்' என்னும் சொல்லின் பொருளைப் பழந்தமிழ் நூல்களுட் பரக்கக் காணலாம். தெய்வத்தின் தாள், மக்கள் தாள் மற்றையுயிர்கள் தாள் எல்லாம் பாவலராற் கூறப்படும் பெற்றிமை புலமைக்கு விருந்தாகும். இயற்கை யுணர்வை இனிது புலப்படுத்தும். முருகன் திருவடியை "உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்" என்றார் ஆசிரியர் நற்கீரனார். 'நோக்கிற்கு நக்கீர தேவர்' (ஆசிரியர் மெய்கண்ட தேவர் என்பது போல்வது) இரு நோக்கும் இல்லார் இதனை அறிவதரிது. இது தெய்வத் திருவடி குறித்தது

பொருநராற்றுப் படையில் (146-180)

'இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்
தாள்நிழல் மருங்கில் அணுகுபு குறுகித்
தொழுது முன்னிற்கு விர்'

என்ற தன் உரையிலே ஆசிரியர் நச்சினார்க்கினியர் (நிழல் மருங்கில் தாள் எனச் சொல்லை மாற்றி) அருளைத் தன்னிடத்திலே யுடைய திருவடிகளை அண்ணிதாக நின்று சேர்ந்து வணங்கி என உரைத் தருளினார் இதில் 'தாள்' திருவடிகள் ஆதலை உணர்தல் வேண்டும்.

கலித்தொகையில் (பாலை. 9.) தாள் நிழல் என் புழித் திருவடியின் 'அருள்' என்றருளினர். 'தன்தாள் சேருநர்க்கு இனிது ஈந்தும், (புறம்361) இது மக்கள் தாள் குறித்தது. 'வானேறு புரையும் நின் தாள் நிழல் வாழ்க்கை'-என்ற (சோணாட்டு முகையலூர்ச் சிறு கருந்தும்பியார் பாட்டினடியும் நோக்குக).

'வஞ்சி மூதூர் மணி மண்டபத்திடை
நுந்தை தாணிழல் இருந்தோய்'

(சிலப். வரந்தரு. 173-4) என்றதனுரையில் பண்டைய மரபறியா தெழுதியதும் அதை வெளியிட்டதும் தமிழர் வருந்தத்தக்கன.

மற்றையுயிர்களைக் குறித்துத் தாளென்னுஞ் சொல்லாட்சியையும் அதன் இயல்பினையும் நோக்குதல் நன்று. "பைந்தாட் குவளைத் தூவிதழ்" 'மாத்தாட் கொழுவிடை' (முருகு. 22) முட்டாட்டாமரை (73) மதவலி நிலைஇய (232) கவைத்தாளலவன் (சிறுபாண். 195), பணைத்தாள் அண்ணல் யானை மாத்தாட் பிடி (நெடுநல் 178) மழை வீழன்ன மாத்தாட் கழுகு (பெரும்பாண். 363) குறுந்தாளேற்றை (பன்றி. புறம் 379) குறுந்தாள் வரகு (பெரும்பாண் 193) குறுந்தாட் கூதளி (குறுந். 60) நெடுந்தாளாசினி (மலைபடு 139) தினைத்தாளன்ன சிறுபசுந்தாள குருகு (குறுந். 25) என வருவன்வற்ருல் தாளின் பசுமை, முள்ளுடைமை, மதவலி மாட்சி, கவையுடைமை, குறுமை, சிறுமை, நெடுமை, பெருமை, முதலிய பண்பு வேறுபாடு புலப்படும் படினும் 'உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்ருள்' என் புழிப் புலப்படும் தாங்குதற்ருெழிலுடைமையே பயின்று வரும் ஆட்சியில் விளங்கும் தாட் சிறப்பாகும். ஆகவே தாளினது தாங்குந் தன்மையே யாங்குங் கொள்ளற் பாலது.

தாள் வேறு, அடி வேறு, கால் வேறு எனல் பழந்தமிழ்ச் செய்யுளாலும் அவற்றின் உரையாலும் அறியப்படுதலையும் ஆகுபெயர். ஆக, ஒன்று மற்ருென்றனைக் குறித்து வருதலையும் புவவர் உணர்வர்.

'திருந்து தாட்கு ஒப்ப வருந்து நாய் நாவிற் பெருந்தகு சீறடி' (பொருநர் 41-2) என்றும் 'களிறு கடைஇய தாட்கழல் உரீஇய திருந்தடி, (புறம் 7) என்றும் வந்தவற்ருல் தாளும் அடியும் வேருதல் தெரியலாம். தாள்-கால் உரைத்த இடம் பலவுள. அம்முறையில் தாளை அடி எனல் பெரு வழக்காயிற்று.

உடலிற் காற்பங்குள்ளது கால் எனப்பட்டது! அக்காரணம் பற்ருது உள்ளங்கால் குதிக்கால், முன் கால் என்னும் வழக்கும் உண்டு. உடல் முழுவதையும் தாங்கும் உறுப்பையே தாளென்றனர். ஆகுபெயர்ப் பொருளை நீக்கி உணரும் பகுதியே தாளாகும். தாள்நிழல் என வழங்குதல் அதற்கே தகும். உருவம் உடையனவற்றின் தாள், இரண்டும் ஆம் பலவும் ஆம். அறுகாற்பறவை, எண்கால் வருடை.

உருவம் உடையன மாகேசுவர மூர்த்தங்கள் அவை இருபத்தைந்து அவற்றுள் ஏகபாதமும் அநேகபாதமும் உள. 'ஒண் (உன்) கழலிரண்டும் 'இரண்டு கொலாம் இமையோர் தொழுபாதம்; இரண்டு சீபாத கமலங்கள், அடியிணையிரண்டும் (சுந்தரர்-சமாச பதிப்பு. 7826) என்பன திருமந்திரத்திலும், 'தன்தாதை தாளும் இரண்டுள' என்றார். அருவுருவம் அருவம் ஆய இரண்டிலும் கொள்ளப்படும் நிலை வெவ்வேறு. உருவம் மூன்றனையும் கடந்த ஞானத்திற் கொள்ளப்படும் திருவடி நிலைமையே தலையாயது. தனிச் சிறப்புள்ளது. அதனைத் ,தாள்' என்னும் வழக்க மிக்க தொன்மையுடையது. அதுவே உயரிய முடிவாய மரபு. [யாம் மறந்தும் மரபு வழுக் கொள்ளேம். தமிழ் மரபும் சைவ மரபும் இரண்டனையும் எம்பால் அனுகி, உடையார் முன் இல்லார் போல் ஏக்கறுது கற்க விழைவார்க்குக் கரவாது வழங்கும் கை வண்மையுள்ளோம். கார் வண்மையும் யார் வண்மையும் நிகராகா. 'ஒன்று அவன் தாளே' என யாம் விதித்திலேம். விதித்தல் என்றலும் பொருந்தாச் 'சொல்லே. மரபன்று' என்றதும் இவண் இயலாது.]

திருவடி இரண்டு என்றது திரோதானசத்தி ஞானசத்தி, அபர ஞானம் பரஞானம், முதலியவற்றை உட்கொண்டு ஒன்று அவன் தாளே என்றது சிவனடியே திருப்பெருகு சிவஞானம் (உவமையில்லாக் கலை ஞானம், அபரஞானம்) பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் (உணர்வரிய மெய்ஞ்ஞானம்) ஓங்குணர்வு, அவனடி அவ்வொளி ஞானம். தாவரும் பவத்தை வேரொடுங்களையுந் தக்க மெய்ஞ்ஞானம்) என்னும் உண்மை ஞானத்தை உட்கொண்டு திருவுந்தியார் முடிவில் 'உண்மையென்னுந் திருவடி' 'சிவனுடைய சத்திய ஞானமான திருவடி' (43. உரை) திரோதையும் அருளாய் மாறி நிற்பதால் இருமை நீங்கி ஒருமையாயிற்று. (சிவப்பிரகாசம். 2. 14. 20. 32. 48.) திரோதாயியை மலமாக் கூறினர். அபரஞானத்தைச் சிவாகமஞானம் என்றனர்; அநுபவஞானம் பரஞானம் திருவருளும் இறைவன் நூலும்.

(அ) 1. 'ஊன்று மலர்ப் பதத்தே உற்ற திரோதம்'
2. 'முத்தி நான்ற மலர்ப் பதத்தே நாடு' என்றவை இரு திருவடி. யாயினும் உருவுடையன ஆகுமோ?

(ஆ) 1. யான் என்னும் செருக்கற்றது ஓரடி.
2. எனது என்னும் செருக்கற்றது ஓரடி ஆக இரண்டு திருவடி

(இ) 1. ஞான சத்தி
2. கிரியாசத்தி என்னும் இரண்டு திருவடித் தாமரைகள் (சிவஞான போதச் சிற்றுரை:-காப்புப்பொருள்)

"யான் எனது என்று அற்ற இடமே திருவடி" (கந்தர் கலி வெண்பா) இவை வேறுபாடுள்ளன போலத் தோன்றலாம். உபதேசம் பெற்றவர்க்கு வேறுபாடு இன்மை விளங்கும்.

"எது அடி என்றிடில் அடி யான் எனது அற நின்றது" (ஞான பூஜா விதி. 13.) "திரோதாயியும் கிரியா சத்தியும் (திருவடி."-(ஷை. உரை) 'பரை உயிரில் யான் என தென்றற நின்றது அடியாம் (உண்மை நெறி) இவற்ருல் திருவடி இரண்டு என்றதன் காரணம் புலப்படும். இவ்வுண்மை சிவஞானத் தோர்க்குப் புலப்படும். ஏனையோர்க்குச் சிறிதும் புலப் படல் அரிது (அரன் அடி ஓர்பவர்-) திருவருள் வடிவாயிருக்கிற ஞானி கள். (சி. போ. சிந்தனை பக். 108) அடி ஒன்றேயாயும் பன்மையிற் கூறும் மரபு தொன்று தொட்டுள்ளது. வடநூலார் இதைக் கௌரவ வாசகம் என மதித்துரைப்பர். கடவுள், கடவுளார் என்றல் போல அடிகள், அடிகளார் என்பது குற்றம் அன்று. அதனுல் அடி இரண்டாய் விடுமோ? ஒருவனை அவர், அவர்கள் என்றதால் பலர் எனல் கூடுமோ?

திருமுறைகளுள் மெய்ப் பொருளை அடிகள் என்று கூறுதல் எல்லாரும் அறிந்ததே. அங்கெல்லாம் கள்ளிறு பன்மை யுணர்த்தி நின்றதன்று. கௌரவ வாசகமாக நின்ற பெற்றியதே. வானொலியில் 'இரு நாடகங்கள்' என்னும் ஆட்சி பெரிது. இரண்டு என்பதே சின்மை யை உணர்த்தப் போதும் 'கள்' பன்மை யுணர்த்தாது வீணேயுளது. ஈண்டும் (அடிகள்) அடி என்றதே போதும். 'கள்' வேண்டாதது எனின் அற்றன்று. மெய்ப்பொருளின் மேன்மையை மதிக்கும் பான்மை மனத் திற்கேயன்றி வாக்கிற்கும் இன்றியமையாதது ஆதலின் என்றும் வேண்டுவதே. 'ஸ்வாமி' என ஒருமையிற் குறியாது 'ஸ்வாமிகள்' எனப் பன்மையிற் கூறும் பழக்கம் வேண்டாததோ?

திருவைந்தெழுத்துள் தூல பஞ்சாக்கரமே திருமுறைகளுட் பெரிதும் எடுத்தோதப்பட்டது. ஏனையவை இலை மறைகாய் போல குறிக்கப் பட்டன. 'பேரெழுத்து ஒன்று' என்று மிகு பஞ்சாக்கரத்தையும் அப்பர் அடிகள் குறித்தருளினுர். 'பேதம் அறும் அருள் கடந்த பேரெழுத்து' (தணிகைப்-குமாநிரசம் 83) என்றதும் அறிக! 'மேலைப் பெருவெழுத்தும் (கொடிப்பாட்டு) இதனுல் தூல பஞ்சாக்கரத்தை மட்டும் மரபாக் கொண்டு மற்றவற்றை மரபு அல்ல என மறுக்கலாமோ?

'ஒன்று அவன் தாளே' என்று யாம் சாதிக்கவில்லை. சமாசப் பதிப்பில் அடிக் குறிப்பாகக் காட்டிய பாடம் ஓரேட்டில் உண்டு. அவ்வேடு 'சாதிக் கின்றது. அவ்வேட்டைக் கொள்ள மறுத்தால் பன்னூறு திருமந்திரப் பாடல்களைப் பிழை எனத் தள்ளி விடல் வேண்டும்.

சைவம் பசு பாசம் சாராமல் நீவுதல் என்னும் அடி ஓரேட்டில் உளது என்று ஷை பதிப்புணர்த்து கின்றது. இது வரையில் வந்த எல்லாப் பதிப் புள்ளும் சைவம் சிவம் தன்னைச் சாராமல் நீவுதல் என்றே உளது, இது திருமந்திரம் ஆமோ? 'சிவோகம் என வேண்டும் இடங்களில் சிவயோகம் என்றே உளது. அச்சுப் புத்தகத்துள்ள பாடமே உண்மை என எவரும் கூறவல்லர் அல்லர்.

திருவடி ஒன்றே என்பதை நிலை நாட்டுதும் அகநானூற்றுக் கடவுள் வாழ்த்துள் 'தாணிழல் என்றுள்ள தன் உரையை ஈண்டுணர்தல் சைவர் எல்லார்க்கும் உறுதி பயப்பதாகும், உளங்கூர் கேள்வி இளம் பூரணர்

எனும் ஏதம் இல் மாதவர் ஓதிய உரை" அக்கடவுள் வாழ்த்துப் பாடற்கு உண்டு. தொல்காப்பியம் இளம் பூரணத்தில், பொருளியலின் தலைச் சூத்திரத்துரையே அது. அதனுள் 'தாள்' என்பதன் பொருள் 'சிவாநந்தாநுபூதி' என்று அவ்வருட் பெருஞ் செல்வரால் அருளப்பட்டது.

மாதவச் சிவஞான முனிவர் தாம் எழுதி அருளியவற்றைச் சிற்றுரையினும் பேருரையினும் (பத்தும் பதினொன்று மாகிய இரு சூத்திரத்தின் கண்ணும்) காண்க.

சிற்றுரை: (10:-1) திருவடியாகிய சிவாநந்தத்தைப் பெறும்

பேருரை: "திருவடியாகிய சிவாநந்தத்தை அநுபவித்தல்.

ஷை. 11:- 'திருவடியாகிய சிவாநந்தாநுபூதியைத் தலைப்படும்'.
திருவடியாகிய சிவாநந்தா நுபூதியைத் தலைப்படும்.

என்றமையாலும் அந்நான் கிடத்தும் அம்முதல்வன் திருவடி என்று சிவஞான மாமுனிவர் எழுதியருளிய தால்' 'அவன்தாள்' என்று திருமூல தேவநாயனார் அருளிய திருவாக்கை யொட்டியே அவரும் அங்கனம் கொண்டார் போலும்.

'கர்த்தாவினுடைய பாதமாகிய திருவருள் (சூ. 2. உரை) 'சீபாதகமல மாகிய திருவருள்(8) பாதகமலமாகிய சிவஞான ரூபம் (9) சீபாதகமல மாகிய திருவருண் ஞானமாய் ஒடுங்கி (10) என்னும் பழைய மெய்யுரையை உணர்க.

'ஒன்று அவன் தாளே' என்ற தன் உண்மைப் பொருள், ஒன்றுவது அம்முதல்வனது திருவடியாகிய சிவாநந்தாநு பூதியே எனல், சித்தாந்தமாயிற்று.

வாக்கியக் கிராமத்தாலும் அதைப் புலப்படுத்தும்,

1. அவன் தாளே ஒன்று
2. அவன் இன்னருள் இரண்டு (பரஞானம், அபரஞானம்)
3. (அவன்) நின்றனன் மூன்றினுள்
4. (அவன்) உணர்ந்தனன் நான்கு
5. (அவன்) வென்றனன் ஐந்தும்
6. (அவன்) விரித்தனன் ஆறும்
7. (அவன்) சென்றனன் பாரேழும்
8. தான் உணர்ந்திருந்தான் எட்டு என அமைத்து உணர்தற் பாலது.

இளம் பூரணரும் நச்சினார்க்கினியரும் சிவஞான மாமுனிவரும் தாள் ஒன்றே எனக் கொண்டு சிவாநந்தம் சிவாநந்தாநுபூதி என்று அதன் பொருளைக் கூறியருளினர். இவ்வுண்மையைத் திருமந்திரம் உணர்த்தியது இதில் யாதும் ஐயம் இல்லை. அடுத்த கட்டுரையில் மேலும் திருவடி உண்மை விளக்கி எழுதப் படும். பின்னர்த் தொல்காப்பியம் குறிக்கும் மந்திரச் செய்யுளை எடுத்துக்காட்டி அதன் உண்மையையும் காஞ்சிப் புராணச் செய்யுளது வாய்மையையும் தக்க சான்று காட்டி எழுதுதும்.

திருமாலடியார்

இராமாநுசர்

பேராசிரியர் திரு. கா. அ. மணவாளன், எம்.ஏ., பி.ஓ.எல்

(22)

திருநாடு அலங்கரித்தல்

கூரத்தாழ்வான் மறைவிற்குப்பின் இராமாநுசர் செய்வதறியாது திகைத்துப் போனார். அவருடைய குமாரர்களான பட்டர், சீராமப் பிள்ளை போன்றவர்களையும், மற்றைய சீடர்களையும் தேற்றினாரே தவிரத் தான் மட்டும் தனிமையில் எண்ணி எண்ணிக் கண்ணீர் வடித்தார். ஆழ்வான் மறைவிற்குப்பின் சில திங்களில் வில்லிதாசரையும், பொன்னாச்சியாரையும் கூட இழந்து விட்டார். இத்தகைய சோக நிகழ்ச்சிகள் இராமாநுசருடைய உள்ளத்தையும் உலுக்கி விட்டன. "கூவிக்கொள்ளும் காலம் இன்னும் குறுகாதோ" என்ற அருளிச் செயல்படி பரமபதத்திற்கு வழி தேடி அவருடைய சிந்தனை அலைகள் சென்றன.

இராமாநுசர் ஸ்ரீரங்கநாதனின் சந்நிதிக்கு எழுந்தருளினார். பெரிய பிராட்டியாரை முன்னிட்டுக் கொண்டு பெருமாளைச் சரணடைந்தார். 'உலகமளந்த பொன்னடியே அடைந்துய்ந்தேன், அணிபொழில் திருவரங்கத்தானே' என்றும் 'அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே' என்றும் சொல்லி, அடியேனைத் திருவடி சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் பிரார்த்தித்தார். அரங்கனும் இராமாநுசருடைய அவதாரப் பயன் முற்றுப்பெற்றது என்று கருதி, 'இற்றைக்கு ஏழாம் நாளில் உம்மை நாம் ஏற்போம்' என்று அர்ச்சகர் வாயிலாகக் கூறித் திருப் பரிவட்டமும் தீர்த்தமும் வழங்கியருளினார்.

உபதேச மொழிகள் :

மடத்திற்கு எழுந்தருளிய இராமாநுசர் தம் சீடர்களை அழைத்தார். வந்து குழுமிய சீடர்களும் என்றும் இல்லாத திருமுகப்பொலிவோடு இராமாநுசர் விளங்கக் காரணம் என்ன என்று சிந்திக்கலாயினர். இராமாநுசரோ அவர்களை நோக்கி இதற்கு முன் தான் கூறிய அரும் பொருள்களையெல்லாம் மறுபடியும் கூறினார். மேலும் பல உபதேசங்களையும் செய்தார். அதாவது பிரபத்தி நெறியை மேற்கொண்ட

பாகவதனுக்குக் கவலையோ, துன்பமோ இருக்க நியாயமில்லை. தன்னுடைய ஆன்ம முன்னேற்றத்திற்கோ, தேக முன்னேற்றத்திற்கோ கவலைப்படுபவன் நாஸ்திகனுவான். நம் ஆத்மாவையும், தேகத்தையும் கூட, பகவதர்ப்பணம் பண்ணி, 'அவன் பொறுப்பு' என்றும், 'அவன் விட்ட வழி' என்றும்' நம்பி வாழ்க்கை நடத்துபவனே உண்மையில் ஆஸ்திகனுவான் என்றும் கூறினுர்.

தொண்டுக்கே கோலம் கொள்ள வேண்டும். பணிகளையெல்லாம் ஆண்டவன் பணியாகவும், அன்பர் பணியாகவும் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தினுர். கடவுளை நேசிப்பவன் நமக்கு நண்பன் ஆவான் என்றும் கடவுளை வெறுப்பவன் நமக்குப் பகைவன் ஆவான் என்றும் அறிவுரை புகன்ருர். இறைத்தொண்டர்களைக் கண்டால் சந்தனம், தாம்பூலம் முதலியவற்றைக் கண்டாற் போன்ற உணர்ச்சி கொள்ள வேண்டும் என்றும் நாத்திகர்களைக் கண்டால் பாம்பையோ, நெருப்பையோ கண்டாற் போன்று அஞ்சி ஒதுங்க வேண்டும் என்றும் பணித்தார். அழியக்கூடிய செல்வத்தையும், சோற்றையுமே போற்றி வாழ்பவர்களைத் துரும்பாக மதித்திட வேண்டும் என்று கூறினுர்.

பரிவும், பிரிவும் :

இராமாநுசர் ஸ்ரீ வைஷ்ணவ தரிசனத்திற்கு ஆசாரியர்களை நியமிக்கத் திருவுள்ளம் பற்றினுர். கூரத்தாழ்வானின் திருக்குமாரரான பட்டரைத் தமக்குப்பின் தர்சனத்தை வளர்க்கும் ஆசாரியராக நியமித்தார். திருக்குருகைப்பிரான் பிள்ளானிடம் திருக்கோயில் நிர்வாகத்தையும், சித்தாத்த பீடத்தையும் வழங்கினுர். பிள்ளானையும் கிடாம்பி ஆச்சானையும், எம்பாரையும் வடுக நம்பியையும் ஸ்ரீ வைஷ்ணவ தர்சனத் தூண்களாக இருந்து காப்பாற்றப் பணித்தார்.

முதலியாண்டான் துயரம் :

இராமாநுசர் துறவை மேற்கொண்ட காலத்தில் நம் முதலியாண்டானை விட்டு மற்று எல்லாரையும் துறந்தோம் என்று கூறினுரல்லவா, அத்தகைய முதலியாண்டான் அருகே கண்ணீரும், கம்பலையுமாக இருப்பதைக் கண்டார். அவரைத் தம் திருமேனியோடு அணைத்துக் கொண்டார். நம்மைப்போலே நீர் ப்ாரத தேசம் முழுவதும் யாத்திரை செய்து சிஷ்யர்களைத் திரட்டி ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்தைப் பரப்பி வாரும் என்று பணித்தார். மேலும் திருவரங்கத்தில் கோயில் கைங்கர்யங்களையும் குறைவற நடத்தி ஸ்ரீபாஷ்ய, பகவத் விஷயாதிகளை உபதேசம் செய்து வரும்படியாகவும் நியமித்தார். அவரும் அப்படியே என்று இராமாநுசர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி ஏற்றுக் கொண்டார்.

இராமாநுசரும், பிராட்டியும் பெருமாளுமாகத் தன் கண் முன்னே காட்சியளிப்பது போன்று உணர்ந்தார். அதோ பெரிய பெருமாள், அதோ பெரிய பெருமாள் என்று அடிக்கடி திருவாய் மலர்ந்தருளினார். தம்முடைய ஆசாரியரான ஸ்ரீ ஆளவந்தாரின் திருப்பெயரையும் உச்சரித்தார். பின்பு பிள்ளான், எம்பார் ஆகியவர்களின் மடியில் திருமுடியையும், கிடாம்பி ஆச்சான் வடுகநம்பி ஆகியவர்களின் மடியில் திருவடி நிலைகளையும் வைத்துக் கொண்டு ஸ்ரீ ஆளவந்தாரைத் தியானித்துக் கொண்டே திருநாட்டுக்கு எழுந்தருளிவிட்டார். பாகவதர்கள் பலரும் அலறிக் கொண்டு வேரற்ற மரம் போலே விழுந்து கிடந்தார்கள். ஆயிரக்கணக்கான சீடர்களும் செய்தியறிந்து வந்து கண்ணீர் வடித்துக் கதறி அழுதார்கள். எல்லோரும் எம்பெருமானாகிற உடையவரின் திருவடிகளைத் தொட்டு வணங்கினார்கள்.

எவ்வளவு நேரம் அழுதாலும் ஆசாரியர் திரும்பி வரப் போகிறாரா? அழாதீர்கள்; அழாதீர்கள் என்று ஒருவரையொருவர் தேற்றினர். மேற்கொண்டு காரியம் நடக்க வேண்டுமே என்று பெரியோர் அருளினர். பின்பு பிள்ளானும், முதலியாண்டானும் நம்பெருமாள் நியமனத்தை மேற்கொண்டு, ஆசாரிய சார்வபௌமரான இராமாநுசரின் திருமேனியைத் திருமதிளுக்குள்ளாகவே திருப்பள்ளி பண்ண வேண்டுமென்று முடிவு செய்தனர்.

திவ்விய விமானப் புறப்பாடு :

வீதிகளெல்லாம் அலங்கரிக்கப் பெற்றன. பல்வகை வாத்தியங்கள் முழங்கின. இராமாநுசருடைய திருமேனியைத் தாங்கிய திவ்விய விமானம் வீதிகள்தோறும் பவனி வந்தது. வேத ஒலியும், திவ்வியப் பிரபந்த ஒலியும் முழங்கின. வழியெங்கும் நடை பாவாடை விரிக்கப் பட்டது. மங்கலப்பெண்டிர் தீபம் ஏந்திச் சென்றனர். 'எம்பெருமானார் திருநாட்டுக்கு எழுந்தருளினார்' என்று ஒற்றைத் திருச்சின்னம் ஊதப் பெற்றது. அமுதனார் இராமாநுச நூற்றந்தாதியை ஓதிக்கொண்டே சென்றார்.

இவ்விதம் ஜகதாசார்யரான எம்பெருமானார்—இராமாநுஜர் திருநாட்டுக்கு எழுந்தருளிய வைபவத்தைத் திருவரங்கத்தில் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான பாகவதர்களும் கண்ணீர் வடித்துக் கண்டனர்; கதறி அழுதனர். இராமாநுசரின் நியமனப்படி ஞானபுத்திரரான திருக்குருகைப் பிரான்பிள்ளான் பிரமமேதச் சடங்குகளுடன் சரம கைங்கர்யங்களைச் செய்து முடித்தார்.

ஆம்; அவதாரப் பிரயோஜனம் முற்றுப் பெற்றுவிட்டது. திருவரங்கத்தில் கோயில் ஆவரணத்துக்குள்ளேயே மூல பிம்பத்தோடு இணைந்த அந்த இராமாநுசர் திருமேனியைக் காணலாம். அணையா விளக்காய் என்றும் நந்தா விளக்காய் இராமாநுசருடைய கொள்கைகள் இந்நிலவுலகில் நிலைத்து நிற்கின்றன.

கருணை வள்ளலான இராமாநுசருடைய சித்தாந்தங்களைப் பிற்காலத்தில் தோன்றிய எவ்வளவோ ஆசாரியர்கள் வளர்த்து வந்துள்ளார்களென்றாலும், அவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள் தூப்புல் வேதாந்தப்பிள்ளையாகிய ஸ்ரீ வேதாந்த தேசிகரும், ஸ்ரீ பிள்ளை லோகாசாரியரும் முக்கியமானவர்கள். அவர்களுக்கும் பின்னே ஸ்ரீ மணவாள மாமுனிகளைக் கூறலாம். இவரை எம்பெருமானாருடைய மறுஅவதாரம் என்றே ஸ்ரீ வைஷ்ணவர்கள் கொண்டாடுவர். அம் மணவாள மாமுனிகள் எம்பெருமானாகிற ஸ்ரீ இராமாநுசருடைய நூல்களை நன்கு ஓதி உணர்ந்தவர். அவர் தாமியற்றிய உபதேச ரத்தின மாலையில் இராமாநுசரைப் போற்றிப் பாடிய பாடல்களைக் கொண்டு நாமும் போற்றுவோமாக.

இன்றுலகீர் சித்திரையில் ஏய்ந்ததிரு வாதிரைநாள்
என்றையிலு மின்றிதனுக் கேற்றமென்தான் —என்றவர்க்குச்
சாற்றுகின்றேன் கேண்மின் எதிராசர்தம் பிறப்பால்
நாற்றிசையும் கொண்டாடும் நாள் (1)

ஆழ்வார்கள் தாங்கள் அவதரித்தநாள்களிலும்
வாழ்வானநாள் நமக்கு மண்ணுலகீர்—ஏழ்பாரு
முய்ய எதிராசருதித் தருளும் சித்திரையில்
செய்ய திருவாதிரை (2)

எந்தையெதிராசர் இவ்வுலகி லெந்தமக்கா
வந்துதித்த நாளென்னும் வாசியினால்—இந்தத்
திருவாதிரை தன்னின் சீர்மைதனை நெஞ்சே
ஒருவாம லெப்பொழுது மோர். (3)

சீராருமெதிராசர் திருவடிகள் வாழி
திருவரையிற் சாத்திய செந்துவ ராடைவாழி
ஏராரும் செய்யவடி வெப்பொழுதும் வாழி
இலங்கிய முந்நூல்வாழி யிணைத்தோள்கள் வாழி
சோராததுய்யசெய்ய முகச்சோதி வாழி
தூமுறுவல்வாழி துணைமலர்கண்கள் வாழி
ஈராறு திருநாமமணிந்த வெழில் வாழி
இனிதிருப்போடெழில் ஞானமுத்திரை வாழியே.

——::——

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

இராமாநுசர் சரிதம் முற்றும்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நம்பியாண்டார் நம்பி-கலித்துறைத் திருவந்தாதி

(குன்றக்குடி ஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் பதவுரையுடன்)

பிரதி செய்தவர்: சேக்கிழார்தாசன்

திருநீலநக்க நாயனர்

பூதிப் புயத்தர் புயத்திற் சிலந்தி புகலுமஞ்சி
யூதித் துமிந்த மனைவியை நீப்பவுப் பாலவெல்லாம்
பேதித் தெழுந்தன காணென்று பிஞ்ஞகன் காட்டுமவ
னீதித் திகழ்சாத்தை நீலநக் கன்னெனும் வேதியனே. 30

(இ-ள்): விபூதியணிந்த திருப்புயங்களை யுடைய சிவபெருமான் திருத்தோளில் சிலந்திப் பூச்சியானது விழவும்; அதனல் அச்சமுற்று வாயாலூதி எச்சில் உமிழ்ந்த மனையாளை விலக்க; ஊதித்துமியாத இடமெல்லாம் சிலந்தியின் விடவேகத்தால் கொப்பளித்தெழுதலை நீ பாரென்று; சிவபிரானல் காட்டப்படும் பெருமையுடையவர் யாரெனின் ஒழுக்க மமைந்த திருச்சாத்த மங்கையில் வாழ்ந்த திருநீலநக்க நாயனரென்னும் மறையவர். (எ-று) ஏ-அசை.

நமிநந்தி யடிகணுயனர்

வேத மறிக்கரத் தாரூ ரரற்கு விளக்கு நெய்யைத்
தீது செறியமண் கையரட் டாவிடத் தெண்புனலா
லேத முறுக வருகரென் றன்று விளக்கெரித்தா
ஞத னெறிலேமப் பேறூ ரதிப னமிநந்தியே. 31

(இ-ள்): வேத வடிவான மான் கன்றை ஏந்திய திருக்கரத்தை யுடைய திருவாரூரின்கண் வீற்றிருந்தருளும் அரனெறி யாருக்கு; திருவிளக்கிடுதற்குரிய எண்ணெயை குற்றம் நிறைந்த சமணராகிய இழிந்தவர்கள் விடாதொழிய; தெள்ளிய நீரினல் சமணர்கள் கலக்கமடைக என்று அந்நாளில் திருவிளக்கேற்றினர் யாரெனில்; எமக்கு முதல்வரும் அழகிய ஏமபேறூர் அதிபரும் ஆகிய நமிநந்தியடிகணுயனர். (எ-று) ஏ-அசை.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

நந்திக்கு நம்பெரு மாற்குநல் லாரூரி ஞயகற்குப்
பந்திப் பரியன செந்தமிழ் பாடப் படர்புனலிற்
சிந்திப் பரியன சேவடி பெற்றவன் சேவடியே
வந்திப் பவன்பெயர் வன்ருெண்ட ரென்பரிவ் வையகத்தே. 32

(இ-ள்): நல்ல திருவாரூரில் வீற்றிருந்தருளும் முதல்வரும்; நந்தியென்னும் திருப்பெயருடையவரும் ஆகிய நமது சிவபிரானுக்கு; பரம்பிய புனலினெழுக்கம் போல் செய்யுட் குற்றமில்லாத செந்தமிழ்த் திருப்பதிகத்தைப் பாடும் படிக்கு; புலவுணர்ச்சியைப் போலச் சுட்டியுணர்தற்குரிய திருவருளைப் பெற்று; அச்சிவபிரான் திருவடியையே வழிபாடு செய்யும் அவரது திருப்பெயர்; இந்நிலவுகத்துள்ள அறிஞர்கள் வன்ருெண்டரென்று கூறுவர். (எ-று) ஏ-அசை. புனலிற் பாடப் பெற்றன இயையும். (தொடரும்)

"தமிழகத்தில் விநாயகர் வழிபாடு"

திரு. ஏ. ஏகாம்பரநாதன், எம்.ஏ.,
தொல்பொருளாய்வுத் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்

இந்து சமய கடவுளர்களுக்கென்று தனித்தனியாகக் கட்டப்பட்ட கோயில்களனைத்திலும் பொதுவாக விநாயகருக்கு ஓர் இடம் அளிக்கப்பட்டுள்ளது. இதுவன்றி விநாயகருக்கெனத் தனிக் கோயில்கள் எண்ணிறந்த அளவில் நம் நாட்டில் கட்டப்பட்டுள்ளன. எக்காரியங் களைச் செய்யத் தொடங்கினாலும் கணேசரை வழிபட்ட பின்னரே அவற்றைத் தொடங்குதல் வழக்கமாகும். சைவ வைணவ சமயத்தினர் தங்களுக்குள் சமயப்பூசல்கள் கொண்டிருப்பினும் வேழமுகத்தானை வழி படுவதில் பொது நோக்குடையவர்களாக இருக்கின்றனர். இந்து சமயத் திலன்றிப் புத்தம் சமணம் ஆகிய பிறசமயங்களிலும் யானை முகக் கடவுள் வழிபாடு உள்ளது' இப்பொதுத் தன்மை விநாயகர் வழிபாட்டின் சிறப்பினை உணர்த்துவதாகும்.

விநாயகர் பிறப்பு :

விநாயகக் கடவுளின் பிறப்பு பற்றிய செய்திகள் வடமொழியிலுள்ள சுப்ரபேதாகமம், சிவபுராணம், மச்சபுராணம், வராகபுராணம், கந்த புராணம், முதலியவற்றில் பலவாறாகக் காணப்படுகின்றன.

வழிபாடு தோற்றம் :

விநாயகர் வழிபாட்டின் தோற்றத்தைப் பற்றிப் பல்வேறு கருத்துக் கள் உள்ளன. வடமொழி முதநூலாகிய ரிக் வேதத்தில் கணங்களின் தலைவனாகிய கணபதியைப் பற்றிய குறிப்பு வருதலால் விநாயகர் வழிபாடு வேத காலத்திலிருந்தது என்று கூறப்படுகிறது. (பி. ஜெயா. 'விநாயகர் வழிபாடு' பக். 18.) ஆனால் ரிக் வேதத்தில் குறிப்பிட் டிருப்பது கணங்களின் தலைவனாகிய உருத்திரனையேயன்றி விநாயகரை யல்ல என்பதைக் கருத்தினிற் கொள்ள வேண்டும். கி.மு. 5-ம் நூற்றாண்டிற்குப் பின்னர் தோன்றிய வடமொழி இலக்கியங்களில் கணேசரைப் பற்றிய சில குறிப்புக்கள் காணப்படுகின்றனவேயன்றி அதற்கு முன்னர் உள்ள இலக்கியங்களில் விநாயகர் இடம் பெற்றதாகத் தெரியவில்லை.

தமிழகத்தில் விநாயகர் வழிபாடு சதுக்கப் பூதத்திலிருந்து தோன்றி யது என்றும், (N. Subramaniam. 'Sangam Polity', pp, 360-61,) புத்த மத வழிபாட்டினின்று தோன்றிய வேழமுகத்தான் தமிழகத்து உழவர்களின் தெய்வம் எனவும், (நா. வானமாமலை. 'தமிழர் நாட்டுப் பாடல்கள்'. பக். 19) புத்தருக்குக் கட்டப்பட்ட கோயில்களனைத்தும் தமிழகத்தில் விநாயகர் கோயில்களாக மாறின, என்றும், (சீனி. வேங்கடசாமி. 'பௌத்தமும் தமிழும்', பக். 70.) யானைகள் மிகுந்த பண்டைத் தமிழ்நாட்டில் விலங்கின வழிபாட்

டின் அடிப்படையில் கணேசர் வழிபாடு தோன்றிற்று என்றும், (கா. சு. பிள்ளை, 'தமிழர் சமயம்'. பக் 18) 'ஓம்' என்ற பிரணவ ஒலிக்கு இறை வடிவம் கொடுத்து தமிழர் விநாயகரை வணங்கினரென்றும், இவ்வழி பாடு தமிழருக்கே உரித்தாயது என்றும் (மறைமலையடிகள். 'தமிழர் மதம் பக். 169.) பல்வேறு கருத்துக்கள் உள்ளன.

ஆனல் இலக்கிய, சிற்பச் சான்றுகளைக் கொண்டு விநாயகர் வழிபாடு பல்லவர் காலத்தில்தான் தமிழகத்திற்குக் கொண்டு வரப் பட்டது என்று முடிவு செய்ய வேண்டியுள்ளது. முதலாம் நரசிம்ம பல்லவன் சாளுக்கிய நாட்டை வென்று, வாதாபியிலிருந்து விநாயகர் சிற்பம் ஒன்றைத் தமிழகத்திற்குக் கொணர்ந்தான் எனவும், இச்சிற்பம் தற்போது கரந்தையில் உள்ளது என்றும் கூறப்படுகிது' சாளுக்கிய நாட்டில் கி.பி 6, 7 ஆம் நூற்ருண்டுகளைச் சார்ந்த விநாயகர் சிற்பங் கள் பல உள்ளன. இவற்றில் விநாயகரை சப்த கன்னியருடன் அமைத்தல் வழக்கமாகும். இராஜசிம்மனல் காஞ்சியில் கட்டப்பட்ட கைலாசநாதர் கோயிலில் இத்தகைய சிற்பம் இடம் பெற்றுள்ளதை நோக்கும் போது சாளுக்கிய நாட்டிலிருந்து தமிழகத்திற்கு விநாயகர் வழிபாடு கொண்டு வந்திருக்கப்பட வேண்டும் என்பது தெளிவாகும்.

தமிழ் இலக்கியங்களில் விநாயகர் :

பண்டைத் தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில் இந்திரன், வருணன் மாயோன், செவ்வேள், கொற்றவை ஆகிய தெய்வங்களன்றி பிற தெய்வங்கள் இடம் பெறவில்லை. சங்க இலக்கியங்களில் மேற்குறிப்பிட்ட தெய்வங்களும், சிவன், நான்முகன், பலராமன், சூரியன், சந்திரன், காயன் போன்ற தெய்வங்களும். மக்களால் வழிபடப் பட்டு வத்தனவேயன்றி விநாயகர் வழிபடப்பட்டு வந்ததாகத் தெரிய வில்லை. இரட்டைக் காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றிலும் விநாயகர் பற்றிய செய்திகள் இல்லை. எனவே இவ்விலக்கிய காலத்தில் கணபதி வழிபாடு தமிழகத்தில் இடம் பெற வில்லை என்பது தெளிவாகும்.

அப்பர், சம்பந்தர் பாடியுள்ள தேவாரப் பதிகங்களில் முதன் முறை யாக விநாயகரைப் பற்றிய சில குறிப்புகள் காணப்படுகின்றன. அப்பர் திருவதிகை-வீரட்டானத்தைப் பற்றியுள்ள பதிகத்தில்,

"பலபல காமத்தராகி பதைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக் கிட்டுத்திரியும் கணபதி என்னும் களிறும்"

(தேவாரம். 4வது திருமுறை. திருவதிகை வீரட்டனம். பதிகம்-2, பா. 5, வரி-1-2. என்றும்,

திருவீழிமிழலையிலுள்ள இறைவனைப் பாடுங்கால், "கைவேழ முகத்த வனைப் படைத்தார் போலும், கயாசுரனை யவனுற் கொல்வித்தார் போலும் (தேவாரம், திருவீழிமிழலை, பா-1002, வரி 1-2) என்றும் குறிப்பிட்டுள்ள மையை நோக்குங்கால் விநாயகர் வழிபாடு அப்பர் காலத்திலிருந்தது

என்பது நன்கு புலனாகும். திருஞானசம்பந்தர் தமது பதிகம் ஒன்றில் "கரியின் மாமுகமுடைய கணபதி" என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இவர் திருவலிவலத்திலுள்ள இறைவனை,

" பிடியத னுருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே"

(தேவாரம், திருவலிவலம்—பா, 1453)

எனப் பாடிப் பரவுயுள்ளார். இப்பாடலில் இறைவன் கடக்களிருகவும், இறைவி மடப்பிடியாகவும் வடிவங்கொண்டு இணைந்ததால் வேழமுகத் தானாகிய கணபதி தோன்றினான் என்னும் கதை கூறப்பட்டுள்ளது. சுப்ரபேதாகமத்தில் விநாயகர் பிறப்பும் பற்றிக் கூறப்படும் கதையினை யே சம்பந்தர் இப்பாடலில் குறிப்பிட்டுள்ளார் என்பது அறியற்பாலது.

சோழர் காலத்தில் மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை, மூத்த பிள்ளையார் மும்மணிக் கோவை, திருநாரையூர் விநாயகர் இரட்டை மணி மாலை, விநாயகர் அகவல் போன்ற இலக்கியங்கள் விநாயகரை முழுமுதற் கடவுளாகக் கொண்டு எழுதப்பட்டமையை நோக்கும்போது இக்காலத் தில் விநாயகர் வழிபாடு மிகச் சிறந்த நிலையிலிருந்திருக்க வேண்டும் என்பது தெரிய வருகிறது. இதற்குப் பிற்பட்ட காலத்திலும் பலசிற்றிலக் கியங்கள் பாடல்கள் கணபதி வழிபாட்டினை இனிது எடுத்தியம்புகின்றன.

கோயில்களும் சிற்பங்களும் :

தமிழகத்தில் பல்லவர் காலக் குடைவரைக் கோயில்களிலும், ஒற்றைக் கற்கோயில்களிலும் கணேசர் சிற்பம் இடம் பெறவில்லை. ஆனால் மாமல்லையில் முதலாவது-பரமேசுவரவர்மன் எடுப்பித்த ராமாநுஜ மண்டபத்தின் கொடுங்கையிலுள்ள பூத கண வரிசையில் ஏழாவது காணப்படும் பூதகணம் மனித உடலும், யானை முகத்தினையும் கொண்டு விளங்குகிறது. (சென்னைப் பல்கலைக்கழக வெளியீட்டு மலர்-1960, பக், 165) இதனை கணங்களுக்குத் தலைவனாகிய கணேசரது சிற்பம் என்று எடுத்துக் கொண்டால் (?) இதுவே தமிழகத்தில் தற்போதுள்ள கணேசர் சிற்பங்களில் முதலாவதாகும். இதுபோன்ற சிறிய சிற்பம் மாமல்லை கடற்கரைக் கோயிலின் கூடு அமைப்பிலும் காணப்படுகிறது.

இராஜசிம்மனால் காஞ்சியில் கட்டப்பட்ட கையிலாசநாதர் கோயிலில் கணேசர் சிற்பம் சப்தகன்னியருடன் காணப்படுகிறது. இவ்வாறு சப்த கன்னியருடன் விநாயகரை அமைக்கும் வழக்கம் கி.பி. 7-ம் நூற்றாண் டில் சாளுக்கிய நாட்டில் அதிகமாக இருந்தது. எனவே இவ்வழக்கம் சாளுக்கிய நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்குப் பரவியிருக்க வேண்டும் என்பது தெளிவாகும். இராஜசிம்மன் கலைப்பானியில் காஞ்சியில் கட்டப்பட்ட கோயில்களாகிய மாதங்கேசுவரர் கோயில், இறவாதேசு வரர் கோயில், திரிபுராந்தகேசுவரர் கோயில் ஆகியவற்றில் அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவர்களில் விநாயகர் சிற்பங்கள் செதுக்கப்

பட்டுள்ளன. மேலும் இறவாதேசுவரர், திரிபுராந்தகேசுவரர் ஆகிய கோயில்களில் கருவறை, அர்த்த மண்டபம் முதலியவற்றின் மூன்று வெளிப்புறச் சுவர்களிலும் சிறிய அளவில் பல விநாயகர் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. பிற்காலப் பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட திருத்தணி வீரட்டானேசுவரர் கோயிலின் தென்புற வெளிப்புறச் சுவர் களிலும் கணேசர் சிற்பம் உள்ளது. பொதுவாக பல்லவர் கால விநாயகர் சிற்பங்கள் அமர்ந்த நிலையில் நாற்கரங்களையுடையதாய், மேலிரு கைகளில் அங்குசம், பாசம் ஆகிய படைக்கலங்களைக் கொண்டும்; கீழ்ப்புற வலது கையில் ஒடிந்த தந்தத்தையும். கீழ்ப்புற இடதுகையில் மோதகத்தையும் பெற்றுத் திகழ்கின்றன. இக்காலத்தில் நின்ற கோலத்திலுள்ள விநாயகர் சிற்பங்கள் இருந்தாகத் தெரியவில்லை.

முற்காலப் பாண்டியர், முத்தரையர்கள் காலக் குடைவரைக் கோயில் களுள் திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த திருக் கோகரணம், மலயக்கோயில், குன்ருண்டார் கோயில் ஆகியவற்றில் கணேசர் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவை மிக்கவாறும் வலம் புரி விநாயகராகவே உள்ளன. மேலும், பாண்டிய நாட்டில் குன்றக்குடி பிள்ளையார்பட்டி, திருப்பரங்குன்றம், செவிலிப்பட்டி, திருமலாபுரம், குன்னத்தூர் ஆகிய இடங்களிலுள்ள குகைக் கோயில்களிலும் கணேசர் சிற்பங்கள் காணப்படுகின்றன. (சென்னைப் பல்கலைக் கழக வெளியீட்டு மலர் 1960. பக், 166) (பிள்ளையார்பட்டியிலுள்ள சிற்பம் கி.பி. 6-ம் நூற்ருண்டைச் சார்ந்தது என்று சிலர் கருதுகின்றனர்.)

சோழர் காலக் கோயில்களின் அர்த்த மண்டபத்திலுள்ள தென்புற தேவகோட்டங்களில் அமர்ந்த நிலையிலுள்ள விநாயகர் சிற்பத்தை நிறுவுதல் வழக்கமாக இருந்தது. வேலும், முற்காலச் சோழர் கட்டிய கோயில்களில் திருச்சுற்றிலுள்ள எட்டுப்பரிவாரக் கோயில்களுள் ஒன்று விநாயகருக்கென்று அமைக்கப்பட்டது. இச்சிற்பங்களன்றி உலோகத் தால் செய்யப்பட்ட விநாயகர் திருமேனிகளும் முற்காலச் சோழர் கோயில்களில் இடம்பெற்றன. இவை மிக்கவாறும் நின்ற கோலத்தில் தான் காணப்படுகின்றன. பிற்காலச் சோழர் கோயில்களிலும் பல விநாயகர் சிற்பங்களும், படிவங்களும் உள்ளன.

விஜயநகர, நாயக்க அரசர்கள் காலத்தில் கணேசரின் பல்வேறு வகையான சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும் கோயில்களில் இடம் பெறலாயின. அவற்றுள் சக்தி கணபதி, நாட்டிய கணபதி, மகாகணபதி வீரவிநாயகர், உச்சிஷ்ட கணபதி, ஹேரம்ப கணபதி போன்றவை மிகவும் முக்கியமானவைகளாகும்.

தற்காலத்தில் விநாயருக்கென்று தனியாகப் பெரிய கோயில்கள் கட்டி விழாவெடுத்து மகிழ்தலைக் காணலாம். தமிழகத்தின் பெரும் பாலான இடங்களில் மிகுந்து காணப்படும் கோயில்கள் விநாயகர் கோயில்களேயாகும். இவ்விநாயகருக்கு நடைபாதை ஓரங்களிலும், நாற்சந்திகளிலும், ஆற்றங்கரை, குளக்கரைகளிலும், அரசமரத்தடி யிலும் சிறிய கோயில்கள் கட்டப்பட்டுள்ளதைக் காணலாம்.

ஊர்திகள் :

இந்து சமயக் கடவுளர்களாகிய சிவன், திருமால், பிரமன், இந்திரன் முருகன் முதலிய எல்லா தெய்வங்களுக்கும் வெவ்வேறு ஊர்திகள் இருப்பது போன்று கணேசருக்கு பெருச்சாளி வாகனமாக விளங்கு கிறது, விநாயகரின் வடிவங்களில் ஒன்ருகிய ஹேரம்பகணேசருக்குச் சிங்கமும் ஊர்தியாக ஏற்றுக்கொள்ளபட்டிருக்கிறது. விநாயகரது ஊர்திகள் பல்லவர், சோழர் காலச் சிற்பங்களில் இடம்பெறவில்லை. பிற்காலத்திலுள்ள சிற்பங்களிலும், படிமங்களிலும், சுதை வடிவங் களிலும்தான் பெருச்சாளி, சிங்கம் ஆகிய ஊர்திகள் காணப்படுகின்றன.

விநாயக சதுர்த்தி :

நம் நாட்டு மக்கள் ஒவ்வொரு கடவுளுக்கும் தனித்தனி விழாவெடுத்து மகிழ்கின்றனர். எந்தக் கடவுளுக்கு விழா எடுப்பினும், முதலில் விநாயகரை வழிபாடு செய்த பின்னரே விழாவினைத் தொடங்குகின் றனர். மேலும், வேழமுகத்தானுக்கு 'விநாயக சதுர்த்தி' என்னும் திருவிழாவும் கொண்டாடப்படுகிறது. முதல்நாள் இவ்விழாவின் போது களிமண்ணுல் செய்யப்பட்ட விநாயகருக்குப் பழம், பூ, கடலை, பொரி, அவல், இனிப்புப் பண்டங்கள் முதலியவற்றைப் படைத்துத் தாங்கள் செய்யும் எந்தக் காரியங்களிலும் இடையூறு ஏற்படாது காத்தல் வேண்டு மென வழிபடுகின்றனர். மறுநாள் களிமண்ணுல் செய்யப்பட்ட அவ்வுருவங்களைக் கிணற்றிலோ, குளத்திலோ அல்லது கடலிலோ போட்டு விடுகின்றனர். விநாயகர் சதுர்த்தி ஆண்டுக்கொரு முறை ஆவணியில் கொண்டாடப்படும் விழாவாகும்.

தத்துவ விளக்கம் :

அண்டங்கள் அனைத்திலும் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் பிரணவ ஒலி 'ஓம்' என்பதாகும் இவ் 'ஓம்' என்ற எழுத்தின் வடிவினை விநாயகர் தன்னுருவில் கொண்டுள்ளதால் ஓங்கார மூர்த்தியாகிருர். உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் அழிந்துபட்டாலும், அழியாது ஒலிக்கும் பிரணவ ஒலிபோல, விநாயகனும் அழிவற்றவனுவான். இவரது மேலிருகைகளில் அங்குசம், பாசம் என்னும் படைக்கலன்கள் உள்ளன. யானைப்பாகன் அங்குசத்தால் யானையினை வழிநடத்தவும், தேவையற்றபோது கயிருல் யானையைக் கட்டிப்போடுவது போன்றும்; விநாயகர் நல்லோரை அங்குசத்தால் நல்வழிப்படுத்தவும், தீயோரைப் பாசத்தைக் கொண்டு துன்பத்தில் தளைக்கவும் செய்கிருர். அவரது கீழிரு கைகளில் தந்தமும், மோதகமும் காணப்படுகின்றன. வலது கையில் ஒடிந்த தந்தம் எழுதுகோலாகத் திகழ்வது கல்வியின் முக்கியத் துவத்தையும், இடது கையிலுள்ள மோதகம் உலகிலுள்ள உயிரினங்கள் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது என்பதைக் குறிக்கின்றன. (சுவாமி சித்பவானந்தர். 'கடவுளின் வடிவங்கள், பக் 78-80).' எனவே கல்விச் செல்வத்தால் சிறப்புற்று நல்வாழ்வு வாழ ஆதி அந்தம் இல்லாத வேத விநாயகனை வாழ்த்தி வணங்குதல் வேண்டும்.

சமயபோதனை

பாடம் 15   வினாக்கள்   ஜூன் 1975

வினாக்கள் இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றியனவே ஆகும். விடைகளை முழு அளவு (Foolscape size) இரண்டு தனித் தாள்களில் நான்கு பக்கத்திற்குள் எழுதி இச்செயலகத்திற்கு 5-7-1975க்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். சந்தா எண், பெயர், வயது, முகவரி இவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மதிப்பெண் சமம்]   [மதிப்பெண் 100

1. மலரிட்டு வழிபடுவது பண்டைய வழக்கம் என்று எப்படித் தெரிகிறது ?
2. விநாயகப் பெருமானின் பழய திருவுருவம் யாண்டுளது கூறுமின்.
3. நீலநக்கர் வரலாற்றை நம்பியாண்டார் நம்பி கூறுமாறு வரைக.
4. திருப்பழையாறை நகர்ப் பெருமை கூறுக.
5. செல்வத்துட் சிறந்த செல்வம் எது ? ஏன் ?
6. உடையவரின் உபதேசங்கள் யாவை ?
7. தாள் என்னும் சொல் எவ்வகைகளில் பயன்படுத்தப் பெற்றிருக்கிறது ?
8. இறைவன் உலகத்தைத் தன்னிடமிருந்தே தோற்றுவித்தான்–இது யார் கூற்று ?
9. அமர்நீதியார் வாழ்ந்த காலம் யாதாய் இருக்கலாம் ?
10. மனம், வாக்கு, காயம் இவற்றின் பயனை எவ்வாறு துய்க்க வேண்டும் என்று அப்பர் பெருமான் கூறுகிறார்.

விடைகளை எழுதி உரிய அஞ்சல்தலை யொட்டிக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும் :—

“அருளோசை”

தமிழ்நாடு தெய்விகப் பேரவை,

9, மகாராஜா சூரியராவ் சாலை,

ஆள்வார்பேட்டை,

சென்னை-600 018.

௫

"வீழ்த்தவா வினையேன் நெடுங்காலம்"

டாக்டர். அ. மா. பரிமணம் எம்.ஏ., எம். லிட். பிஎச். டி.,

ஓரான்மா செய்த வினைகளுக்கேற்ப அதற்குப் பிறவி அமையும் என்பது பொதுவாக இந்தியச்சமயங்கள் பலவும் உடன்படும் கருத்தாகும். ஆன்மா இப்பொழுது அடைந்திருக்கும் பிறவி அதன் முன் வினைப்பயனாகும் என்பதனைத் தெய்வக்கோட்பாடில்லாத சமணம் புத்தம் போன்ற சமயங்களும் உடன்படுகின்றன. "வினையின் வந்தது வினைக்கு விளைவாயது" எனப் புத்தச் சார்பான மணிமேகலையும், 'ஊழ் வினை உறுத்து வந்து ஊட்டும்' எனச் சமணச் சார்பான சிலப்பதிகாரமும், முறையே பிறவியையும் அதற்குக் காரணமான வினைகளையும் அழித்தகற்றி வீடுபேறெய்தும் நெறிமுறைகளைக் கூறும் வகையில் இச்சமயங்கள் வேறுபடுகின்றன.

இப்பொழுது பெற்றுள்ள பிறவி, முன்வினைப்பயன் என்றும், நல்வினையின் பயனாக இன்பம் அடைந்தாலும் அது சிறியதாய், அழியும் தன்மை உடையது என்றும், அதனால் இப்பிறவியை நீக்கி இனிப் பிறவாத நிலையினை அடைதல் வேண்டும் என்றும், அதற்கு இறைவன் துணையாதல் வேன்டு மென்றும் சைவம் வைணவம் முதலிய இந்து சமயங்கள் அனைத்தும் எடுத்துரைக்கின்றன. இவ்வகையில் இறைவன் ஆன்மாக்களுக்குச் செய்யும் அருளை நினைந்து, மணிவாசகர் இறைவனை,

> "மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே
> கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லான்"

என்று ஏத்துகின்றார்.

இம்மையில் எய்தியுள்ள உடம்பும் (தனு) அதன்கண் அமைந்துள்ள அகப்புறக்-கருவிகளும் (கரணங்கள்) ஆன்மாக்கள் வினையின் நீங்கி வீடுபேறெய்துவதற்கு இறைவன் வழங்கிய அருட்கொடையாகும். உடம்புகளிலெல்லாம் மானிட உடம்பு (மனிதப்பிறப்பு) வீடு பேற்று முயற்சிக்குப் பெரிதும் உதவுவதாகும். மனம் என்னும் அரியதோர் அமைப்பினைப் பெற்றுள்ளதால் மானிடப்பிற்ப்பு வீடுபேற்று நிலைக்கு அரிய சாதனமாகிறது. விலங்கு முதலிய மற்றப் பிறவிகட்கும் வாயுண்டு, கைகால்களுமுண்டு. அவற்றால் அவை உண்ணவும், ஏனைய செயல்களைச் செய்யவும் மட்டுமே கூடும். மனமெனும் அமைப்பு வாய்த்திருப்பதால், மனிதப் பிறவியில் அமைந்துள்ள வாய், உணவு உண்பதோடு 'இறைபுகழ் உணர்ந்து ஏத்தவும், கை முதலிய உறுப்புக்கள் பிறசெயல்களைச் செய்வதனோடு இறைபணி நிற்கவும் வல்லனவாக விளங்குகின்றன. வாய்த்தது ஈதோர் பிறவி மதித்திடுமின், என்று இறைவனை வணங்குவதற்கு வாய்ப்பாக அமைந்த மானிடப்-பிறப்பினை அப்பரடிகள் பாராட்டுகின்றார். மேலுமவர் மனித மனத்தின் மாண் புணர்ந்து அதனை நெறிப்படுத்தும் வகையில், மனத்தொகை, சித்தத் தொகை, உள்ளத்திருக்குறுந்தொகை என்று மூன்று பதிகங்களைப் பாடியுள்ளார்.

இறைநிலையுணர்ந்து, அவனருளால் அவன்தாள் வணங்கி வீடு பேறடைய மக்கள் முயலும் நெறிகளில் இறைவன்பால் அன்பு கொண் டொழுகும் பக்திநெறியே எளியதும் இனியதுமாகும். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் பெருநோக்கில், மக்களனைவரும் பேரின்பமெய்த வேண்டும் எனக் கருதிய ஆழ்வார்களும், நாயன்மார் களும் தோற்றுவித்த பக்தி நெறி வெள்ளமெனப் பெருகித் தமிழகத்தை வாழ்வித்தது. இனிமையும் எளிமையும் மிக்க பக்திநெறியினைத் தமக்கு உணர்த்தித் தம்மை ஆட்கொண்ட இறைவன் கருணைத் திறம் நினைந்து மணிவாசகர்,

"முக்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளிய வாறுர் பெறுவார் அச்சோவே"

என்று புகழ்ந்து போற்றுகின்றார்.

நம் சமயகுரவர்களாகிய அருட்சான்றோர்கள், மக்கள்பால் கொண்ட பெருங்கருணையால், மக்களிடம் காணப்படும் குறைகளையெல்லாம் தங்கள்மேல் ஏறட்டுக் கொண்டு வருந்துவதைக் காணலாம். சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும், பவமதனை அறமாற்றும் பாங்கி னில் ஓங்கிய ஞானமும் முதலான ஞானநிலையனைத்தும் கைவரப் பெற்ற அச்சான்றோர்கள், ஏனைய மக்களைப் போலவே, இறைவனை நினை யாமலும், அவன் புகழ் உரையாமலும், அவனைத் தொழுது வணங்காம லும் வாணாளை வீணாக்கியதாகப் பாசுரங்கள் பாடியுள்ளார்கள். அத்தகைய பாசுரங்கள் பயில்வோர் தம்மைத் தந்நிலை உணரச் செய்து, அதற்கு வருந்தி இரங்கச் செய்கின்றன. இறையருளால் சைவ சமயத் திற்குத் திரும்பிய தருமசேனர் அப்பரடிகளான பின், சீவகரணங்கள் சிவகரணங்களாகச் செம்மையுற்ற நிலையில் அக்கருவி கரணங்களை நினைந்து இரங்கிப் பாடியுள்ளது, அடிகள் மக்கள்பால் கொண்ட கழி பேரிரக்க உணர்வினைக் காட்டவல்லதாக உள்ளது. அத்தகைய பாடல் களில் ஒன்று "வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும்" எனத் தொடங்கும் தனித்திருக்குறுந்தொகைப் பாடலாகும்.

நெஞ்சம் முதலிய அகக்கருவிகளும், வாய் முதலிய புறக் கருவிகளும் நாமாகப் படைத்துக் கொண்டனவல்ல. அவை தாமாக அமைந்தனவும் அல்ல. இறைவன் அவற்றை நாம் உய்வதற்குத் துணைக்கருவிகளாகத் தந்திருக்கிறான். ஏனைய உயிர்களிடம் இக்கருவிகள் அவற்றின் உடல் வாழ்வுக்கான கருவிகளாகவே பயன்படுகின்றன. மனமெனும் அமைப் பினைப் பெற்றுள்ள மக்களிடம் இக்கருவிகள் அவர்களின் உடல்வாழ்விற் குப் பயன்படுவதோடு, அதனினும் மேலான ஆன்ம வாழ்வுக்குத் துணை செய்வனவாகவும் அமைகின்றன. அந்நிலையில் வாய் உண்பதற்கே யன்றி, இறைபுகழ் உரைப்பதற்கும் கருவியாகின்றது. மனம் பொறி உணர்வுகளைப் பதிவு செய்து, நினைவு கொள்ளுவதேயன்றி, இறைவன் பொருள்சேர் புகழைச் சிந்திப்பதற்கும் கருவியாகின்றது. அங்ஙனமே தலை, பொறிபுலன்களை உள்ளடக்கிப் பேணும் பெட்டகமாக உயர்ந்து நிற்பதோடு, இறை நினைவில் வணங்கித் தாழும் கருவியாகவும் திகழ் கின்றது. இவ்வாறே பிற உறுப்புக்கள் அனைத்தும் மனிதப் பிறவியில் பொதுச் செயலோடு தனிச் செயல் புரிவனவாகவும் அமைகின்றன. இவ்வுறுப்புக்கள் இவ்வாறு செயல்பட வேண்டும் என்னும் கருத்தில் இறைவன் இவற்றை மக்கட்கு வழங்கியுள்ளான் என்பதனை அப்பரடிகள்,

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்"

என்று குறிப்பிடுகின்றார்.

வாய் முதலிய கருவிகள் வாழ்த்தல் முதலிய சிறப்புச் செயல்களை ஆற்றாமல், உண்ணல், பேசல் முதலிய பொதுச் செயல்களையே புரிந்து காலத்தைக் கழிப்பதனைப் பல மக்களிடம் கண்ட அடிகள் அதனைத் தம் கருவிகள் மேல் ஏற்றி, அவை தம் சிறப்புச் செயல்களில் ஈடுபடவில்லையே என நினைந்து ஏங்குகின்றார். கருவிகள் அனைத்தும் தத்தமக்கு உரிய வகையில் இறைவனை நாடிச் செயல்படவும் மலர் தூவி வழிபடவும் கூடாத நிலையில் தம்முடைய நெடிய வாணாள் வீணாகிவிட்டதே என்று இரங்குகின்றார். வழிபட்டு வாழ்நாளைப் பயன்படுத்திக் கொள்ளாத மக்களின் வாழ்வை நினைந்து அதனைத் தம்மேல் ஏற்றி அடிகள்,

"சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே"

என்று வருந்தி உரைக்கின்றார்.

உள்ளம் (மனம்), உரை (வாக்கு), மெய் (காயம்) ஆகிய மூன்றும் முக்கரணம் எனப்படும். அம்மூன்றும் ஒன்றுபட்ட நிலையில் அமைவது முக்கரண வழிபாடு ஆகும். மக்கள் வழிபாடு அவ்வாறு அமைதல் வேண்டும் என்ற கருத்தில் 'வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் அமைந்துள்ளன' வென்று குறிப்பிட்டுள்ளார்.

புறக்கருவிகளில் மெய், வாய், கண், மூக்குச் செவிகள் அறிகருவிகள் எனவும், வாக்கு பாதம் பாணி பாயுரு, உபத்தம் என்பன செய்கருவிகள் எனவும் கூறுவர். வாய் பேசும் தொழிலால் செய்கருவியும், சுவை உணரும் தொழிலால் அறிகருவியுமாகும் சிறப்புடையது. வாய் செய் கருவியாகச் செயல்படுவது-சிறப்பாக இறைவன் புகழை இயம்பும் நிலையில் செயல்படுவது-சிறந்ததாதலின் 'வாழ்த்த வாயும்' என்று தொடங்கியுள்ளார். சீவபோதம் அகன்று சிவபோதமுற்ற நிலையில்-கருவிகள் அனைத்தும் சிவத்தன்மை எய்திய இறைவன் அக்கருவிகளாகவே விளங்குகின்றான் என்பதனை உணர்த்தவந்த மணிவாசகர் வாயின் பகுதியான நாவினை முன்னிறுத்தி, "கூறும் நாவே முதலாகக் கூறும் கரணம் எல்லாம்நீ" என்கிறார்.

நெஞ்சம் ஆற்றல் மிக்க அரியதொரு கருவியாயினும் அறியாமையும் மயக்கமும் கொண்டதாகும். அந்த நெஞ்சின் இயல்பினை மக்கள் மேல் ஏற்றி "ஒரு பொழுதும் வாழ்வதறியார் கருதுவ கோடியும் அல்ல பல" என வள்ளுவர் சுட்டிக் காட்டுகின்றார். அதனால் "நினைக்க மட நெஞ்சும்" என்று அடிகள் கூறியுள்ளார். உடம்பினைப் போலக் காலத்தால் மூப்பெய்தி நரை திரை அடைந்து தளர்வது உள்ளத்திற்கில்லை. உள்ளம் புலநுகர்வால் எய்தும் அனுபவங்களால் நிறையுமேயன்றி முதுமையுற்றுத் தளர்வதில்லை. என்றும் இளமைத் தன்மையது. இவ்வுண்மையினை 'முதுச் சுவற் கலித்த முற்றா இளம்புல் மூதா தைவந்தாங்கு' என்றும் சங்க இலக்கியக் காதலுவமை நன்கு புலப்படுத்தும். 'மடநெஞ்சு' என்னும் தொடர், நெஞ்சத்தின் மூவாத்தன்மையினைச் சுட்டும் குறிப்பு முடையது.

சென்னி கருவிகள் பலவற்றையும் உள்ளடக்கி உயர்ந்து விளங்கும் உறுப்பாகும். அதனுடைய வணக்கம்-பணிவு-அனைத்துக் கருவிகளும் அடங்கிச் செயல்படுவதனைக் குறிக்கும். மெய்யெல்லாம் வழிபடுவதனைக் காட்டும் அறிகுறியாக அமைந்தது சென்னியின் வணக்கம். அதனால் 'தாழ்த்தச் சென்னியும்' என அடிகள் கூறுகின்றார். சிவபெருமானுடைய திருவடியினை வணங்கிய சேர வேந்தனைக் குறிப்பிடும் போது "இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலங்கொண்டு" என இளங்கோவடிகள் கூறுவது குறிப்பிடத்தக்கது.

கரணங்கள் ஒன்றுபட்ட நிலையில் மலர் தூவி வழிபடுவதனைக் கடமையாகக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு வழிபடாது கழியும் நாட்கள் எல்லாம் ஒருவனுக்குப் பயனின்றி வீழ்ந்து பட்ட நாட்களாகும். நெடுங்காலத்தைத் தாம் அவ்வாறு வீணாகக் கழித்துவிட்டேனே, என் செய்வேன் என்னும் அடிகளின் ஏக்கத்தினை,

"சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே"

என்னும் பகுதி புலப்படுத்துகின்றது. இவ்வாறு வீணாக்கியதற்குத் தன் வினையே ஏதுவாகும் என்பதனை 'வினையேன்' என்பதனால் குறிப்பிடுகின்றனர் "வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே" என்ற தொடர் அமைப்பு 'இறைவன் நெடுங்காலம் தந்திருப்பது இவ்வாறு வீணாக்குவதற்காகவா' என்று அடிகள் தம்மைத் தாமே வினவிக் கொள்ளும் குறிப்பினையும் காட்டுகின்றது.

உறுப்புக்கள் அனைத்தும் தனித்தனியே இறைவனை நினைந்து செயல்பட வேண்டும் என்னும் உண்மையினை 'தலையே நீ வணங்காய்' எனத் தொடங்கும் திருவங்கமாலைத் திருப்பதிகத்தில் அடிகள் நன்கு விளக்கிக் கூறியுள்ளார். உறுப்புக்களை விளித்து அவற்றை இறைபணி நிற்குமாறு ஏவி அவற்றை ஆற்றுப்படுத்தும் அப்பதிகம் பக்தி உலகில் தனிச் சிறப்புப் பெற்று விளங்குவதாக உள்ளது.

மலரிட்டு இறைவனைத் துதிப்பது பழந்தமிழ் மக்களின் கோட்பாடாகும். பக்தி நெறியினைப் பரப்பிய அடிகளும் மலர் வணக்கத்தையே பெரிதும் வலியுறுத்திக் காட்டுகின்றார். புறவழிபாட்டில் மலர்களின் இன்றியமையாமையினை உணர்ந்த பெருமக்கள் அக வழிபாட்டிற்கு வாய்மை முதலிய பண்புகளை மலர்களாகக் குறிப்பிட்டுள்ளனர். மலர்களைக் கொள்ளும் முறையறிந்து கொள்ளுதல் வேண்டுமென்பார். "சூழ்த்த (சூழ்ந்த) மாமலர்" என்கிறார். இதனை விளக்கி அடிகளே பிறிதோரிடத்தில் "அரும்பற்றப்பட ஆய்மலர் கொண்டு நீர் சுரும்பற்றப் படத் தூவித் தொழுமினோ" என விளக்கியுள்ளார்.

நம் குறையினைத் தம் குறையாகத் தம்மேல் ஏறட்டுக்கொண்டு, நாம் உய்வதற்காக அடிகள் பாடியருளிய அமுதத் திருப்பாடலைப் பயின்று வீழ்நாள் படாது நன்றாற்றி வாழ்நாள் வழியடைக்கும் வழி பெறுவோம். அத்திருப்பாட்டு வருமாறு:-

" வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வா வினையேன் நெடுங் காலமே"

௨

பிறவாமை வேண்டும்

புலவர் த. கோடப்பிள்ளை, பி.ஏ.,

காட்சி 1

இடம் : தனதத்தன் இல்லம்.

காலம் : பகற்போது

உறுப்பினர் : தனதத்தன், பொன்னம்பலம், மருதவாணர், சிவகாமி முதலானவர், தொட்டிலில் ஒரு குழந்தை.

(திரை விலகும்போது நடராசர் திருவுருவத்தின் முன் பூசை நடைபெறுகிறது.)

ஒரு பெண் குரல்: நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க! இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான்தாள் வாழ்க!

பொன்னம்பலம் : (பாடுகிறார்)

"ஆறேறு சென்னி முடியாய் போற்றி!
அடியார்கட் காரமுதாய் நின்றாய் போற்றி
நீறேறு மேனியுடையாய் போற்றி
நீங்கா தென்னுள்ளத் திருந்தாய் போற்றி
கூறேறு மங்கை மழுவா போற்றி
கொள்ளும் கிழமை ஏழானாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி."

ஓம் சிவாய நம! (திருநீறு கொடுக்க எல்லாரும் பூசிக் கொள்கின்றனர்). தனதத்தனாரே!

தனதத்தன் : சிவ, சிவ! எனது சுற்றத்தாரும் பெரியோர்களுமாக இங்கு வந்துள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன். நமது முன்னோர் செய்த தவப் பயனேயாய் ஒரு பெண் எமக்குத் தோன்றியுள்ளது. எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் திருவருளே திருவருள்! பெண் மகவுக்குப் பெயர் சூட்டித் தாங்கள் எல்லாரும் வாழ்த்தியருள வேண்டுகிறேன்.

மருதவாணர் : தனதத்தரே! பெண் பிறந்ததோ பொன பிறந்ததோ என்று சொல்வது உலக வழக்கு. அது போலத் தாங்கள் குடும்ப விளக்காக ஒரு பெண் பிறந்துள்ளது, எங்களுக்கெல்லாம் மட்டில்லாப் பெருமகிழ்ச்சி. குலகுரு சிவஞானச்செல்வர் தவத்திரு பொன்னம்பலம் அவர்களே பெண் மகவுக்குப் பொருத்தமான பெயர் கூறி முதலில் வாழ்த்தியருளட்டும்.

தனதத்தன் : அப்படியே!

பொன் : நமப்பார்வதி! பதயே!

எல்லாரும் : அரகர மகாதேவா!

பொன் : செல்வச் செழுமையாலும் சிவபக்தியாலும் உலகிலேயே ஈடும் எடுப்பும் இல்லா வணிகர் மரபைச் சேர்ந்த பெரு மக்களே! காரைக்கால் வணிகர்களே! உங்கள் அனை வருக்கும் உமையொருபாகன் திருவருளால் எல்லா இன்ப மும் பெருகுக. நமது மெய்யன்புக்குரியாராக விளங்கும் திருமிகு தனதத்தனர் பெற்றெடுத்த குலக்கொடி நீடூழி வாழ்க! இப்பெண் குழந்தையைக் காணும்போதே சிவனருள் நமதுள்ளத்தில் தானே பெருகித் தோன்று கிறது. புனிதமான சிவத்தொண்டு செய்துவரும் தனதத்தனர்க்குத் தோன்றிய இப்பெண்ணுக்குப் புனிதவதி எனப் பெயரிடுவது திருவருள் சம்மதமாகும் என எண்ணுகிறேன். ஆம், புனிதவதி எனவே பெயரிடுகிறேன்.

தன : ஆகா...

சிவகாமி : புனிதவதி! அருமையான பெயர்!

மருத : நல்ல பெயரே!

பொன் : 'திருமடந்தையே அவதரித்தாள் என வந்த புனிதவதி' சிறந்த ஞான விளக்காக விளங்கலாம். புனிதவதியின் மாட்டு இறைவன் திருவருள் மிளிர்வதாக! புனிதவதி ஐயாறப்பன் தலையில் இலங்கும் அழகுத் திங்கள் கொழுந்துவளர்வதென வளர்க, வளர்க! வாழ்க, வாழ்க!

எல்லாரும் : வாழ்க! வாழ்க!

பொன் : (மங்கல அரிசியையும் மலர்களையும் குழந்தைக்குத் தூவித் திருநீறும் குங்குமமும் (அணிவிக்கிறார்) வாழ்க! வாழ்க!

எல்லாரும் : வாழ்க! வாழ்க!

காட்சி. 2.

இடம் : தெரு

காலம் : பகற்போது

உறுப்பினர் : நந்தி, சிவப்பழம், தனதத்தன், மற்றும் சிலர்

நந்தி : திருநீறு பூசி சிவநெறி பெறுவோரே மாந்தர்க்குள் மாந்தர்! ஒரு நீதியா உலகினுள் உயர்ந்து நிற்பது சிவநீதி சிவநீதியே! (தன் முன்பு நிற்போர் மீது திருநீற்றை அள்ளி வீசி) வாருங்கள், வாருங்கள்! அருட்பிரசாதம் பெறுங்கள்! பெறுங்கள்! எல்லார்க்கும் உள்ள பொல்லாங்கைப் போக்குவது தள்ளாது கொள்ள வேண்டிய சைவ நெறியே! வாருங்கள் அடியார்களே! 'தாருங்கள் தாருங்கள் திருநீறு' எனக் கேளுங்கள்; கேளுங்கள்!

ஓர் அடியார் : ஐயா எனக்குக் கொடுங்கள். (கொடுக்கிருன்) இந்தாருங்கள் தட்சணே! (வாங்கி எக்கில் செருகிக் கொள்கிருன்.)

நந்தி : இது-இந்தத் திருநீறு-இன்று சீர்காழிப் பதியினின்று கொண்டு வரப்பட்டது; உங்கள் நன்மைக்காகவே கொண்டு வரப்பட்டது, சிவபெருமான் திருவருளேப் பெற்றுச் சிவனருட் செல்வராகுங்கள்! இந்தா வாங்குங் கள்; பூசுங்கள், நன்மை அடையுங்கள்! (திருநீறு வாங்குவோருள் சிவப்பழம் இருப்பதைக் கண்டு) ஆ...சிவப்பழம்! சிவப்பழம்! அண்ணே! பிரசாதம் பூசிக் கொள்ளுங்கள்! (சம்புடத்தை மூடிக் கொள் கிருன்). (மற்றவரெல்லாம் போகிருர்கள்)

சிவப்பழம் : அப்பா நந்தி! எனக்கும் சிவனருள் கிட்டும் வழி சொல் கிருயா? கைலாய மலேக்கு வழி காட்டுகிருயா?

நந்தி : என்ன அண்ணே! என்னேக் கேலி பண்ணுதீர்கள் அண்ணே! என்னமோ இதெல்லாம் பிழைக்கும் வழி!

கிவப் : சரி, சரி, வா, நம் முதலாளி தனதத்தன் வருகிற நேரம். வழியிலே நின்று பேச வேண்டாம்.

நந்தி : வருகிற நேரமா? அதோ வந்து விட்டாரே அணணே! நம்மைப் பார்த்து விட்டாரே!

சிவப் : ஆமாம் நந்தி! ஐயா வணக்கம்!

நந்தி : வணக்கம் ஐயா!

தன : சரி.... சிவப்பழம்! நந்தி! நாளேக்கு நம் வீட்டுக்கு விருந்தினரெல்லாம் வருகிருர்கள்.

நந்தி : விருந்துங்களா? நான் வந்து விடுவேனுங்க!

சிவப் : வரட்டுங்க, நன்ருக வரவேற்போம். வருகிறவர் யாருங்க ?

தன : உம்.... அதையல்லவா முதலில் நான் சொல்லியிருக்க வேண்டும்! நம் மகள் இருக்கிருளே....

சிவப் : ஆமாம்...

நந்தி : புனிதவதியம்மா!

தன : புனிதவதியைப் பெண் பார்க்க வருகிருர்கள்.

சிவப் : அப்படியா! மகிழ்ச்சி!

நந்தி : பையன் யாருங்க ?

தன : பையன், மிக நல்லவன், அழகானவன். நம் புனித வதிக்கு ஏற்றவன் தான்.

சிவப் : எந்த ஊர் ?

தன : நாகப்பட்டினம். நாகப்பட்டினத்திலே துணிக் கடை வைத்திருக்கிருரே-அவர் தான்-நிதிபதி...

சிவப் : ஆமாம், ஆமாம். நம் கடையிலேகூட, வரவு செலவு உண்டே, அந்த நிதிபதியா ?

நந்தி : நல்ல, பெரிய இடமாயிற்றே; பெயரே நிதிபதி! உண்மையிலேயே நிதிக்குப் பதிதான்!

தன : அவரே தான். அவருடைய மகன், பரமதத்தன், பையன், நல்லவன் போ! அவனுக்கு நம் மகளைக் கேட்டு மண முடிக்க நாளைக்கு வருகிருர்கள்.

நந்நி : மிகவும் நல்லது.

தன : நீங்களெல்லாம் நாளைக் காலையிலேயே வீட்டுக்கு வந்திட வேண்டும், தெரியுதா ?

சிவப், நந்தி : வந்திடுவோங்க !

தன : உம்! சிவப்பழம்

சிவப் : ஐயா!

தன : பையனை எங்களுக்கும் பிடித்திருக்கிறது. அவன் நாளைக்கு வருகிற போது நீ அவனோடு நல்லாப் பழக வேண்டும். நமக்கு ஒரே பெண்தானே. செல்லமாக வளர்த்திருக்கிருேம். பையனோடு பழகிக் குண நலங் களையும் தெரிந்து கொள்ளணும்! என்ன தெரிகிறதா ?

சிவப் : நல்லா அறிந்து விடுகிறேனுங்க. பையனைப் பிடித் திருக்கிறது என்ருல் விரைவில் திருமணத்தை முடித்திட வேண்டியது தானுங்களே ?

தன : ஆமாம், ஆமாம், அப்பன் அருளாலே! விரைவில் திருமணத்தை முடிக்கத்தான் நினைக்கிருேம்.

நந்தி : எல்லாம் உங்கள் நல்ல மனதுக்கு, விரைவில் முடிந்து விடுங்க.

தன : அப்பனே! ஐயனே! நீயே துணை. வாங்கப்ப போவோம்.

நந்தி : போவோம்.

(தொடரும்)

உ

குன்றக்குடி

அருள்மிகு ஆறுமுகப்பெருமான்

பாமாலை

மரு. பரமகுரு

செய்யும் தொழிற்குத் துணையாய்ச் சிறப்பவன் செந்தமிழில்
நெய்யும் கவியினில் நெஞ்சம் நிலைப்பவன் நேர்மையிலாப்
பொய்யர் அறியாப் பெரும்புலவன் குன்றைப் பொன்மலையில்
கைவே லுடன் நின்று காப்பவன் என்றும்எம் கந்த வேளே. (46)

அழகு மயிலேறி அண்ட சராசரம் அத்தனையும்
சுழலச் சுழன்று வந் தோழும் வேண்டச் சுடர் முடிநீர்
ஒழுகப் புனைந்தவன் ஐங்கரத் தோன் பரம் உய்ப்பஞானப்
பழமான தண்டா யுதபாணி தாள் பற்றின் பற்றறுமே. (47)

உதயச் செழுங்கதிர் போலே விளங்கி உலகவர்தம்
இதயத் திருள்சீய்த் தெழு ஞாயி றேவான் எழிலுடுக்கள்
உதிரக் கிரவுஞ்ச மாமலை தாள்பட ஓங்கு வைவேல்
அதிரக் கரம் தொட்ட வா அறியாமை அழித்தருளே. (48)

ஒரு கதியின்றி உழல்கின்ற நாயேற் குனது மலர்த்
திருவடி காட்டிச் சிறுமை சிதைப்பாய் சிகண்டிமலை
மரகத வெற்புமேல் மாணிக்கக் குன்று வளர்ந்தது போல்
விரிபசுந் தோகை மயில்மீ தமர்ந்தநல் வேலவனே. (49)

பத்தித் திருமுகம் ஆறும் வரைப்புயர் பன்னிரண்டும்
தித்தித் திட அருள் தெள்ளமு தேஒரு செம்பொருளே
சித்தத் திடையிருள் சீய்த் தெழு ஞானச் செழுங்கதிரே
அத்தா எனக்கும் அருளுக நின்றன் அடிமலரே. (50)

என்றுவந் தாய்முன் எனுங்குறிப் போடெழில் ஏறுமயில்
நின்றிறங் கத்திநத் தாளெடுத்த கோல நிலையினில் வேல்
ஒன்றுவந் தாய் குன்றை ஆறுமுகா நாளும் உள்ளுருகி
நன்றுவந் தாருக்கெஞ் ஞான்றும் அருளும் என் நாயகமே. (51)

காலங்கள் தோறும் கருத்தழிந் தேழைகள் காரிருளில்
ஓலமிட் டேங்கி ஒடுங்கினர் ஏய்ப்பவர் ஓங்கினரே
சிலமோ இந்நிலை தெய்வமே தேவரைக் காக்க நெற்றிக்
கோலக்கண் பூத்த குமரா கடைக்கண் குறித்தருளே. (52)

(தொடரும்)

மேல் அட்டைப்படம்—குன்றக்குடி அருள்மிகு சண்முகநாதர்

உ

திருச்சிற்றம்பலம்

திருவருட்பா

(சற்குருமணி மாலே)

ற்கரை யும்படி கரைவிக்குங் கருத்தே
    கண்மணி யேமணி கலந்தகண் ஒளியே
சொற்கரை யின்றிய ஒளியினுள் ஒளியே
    தூரியமுங் கடந்திட்ட பெரியசெம் பொருளே
சிற்கரை திரையறு திருவருட் கடலே
    தெள்ளமு தேகனி யேசெழும் பாகே
சர்க்கரை யேஅது சார்ந்தசெந் தேனே
    தனிநட ராசஎன் சற்குரு மணியே

—திருவருட்பிரகாச வள்ளலார்

திருச்சிற்றம்பலம்

• • •

சக்தி சுகர்ஸ் லிமிடெட்

முதல்தரமான படிக வெண்சர்க்கரை, எரிசாராயம் தயாரிப்பாளர்கள்

• • •

வீரிய ஒட்டுவிதைகள் உற்பத்தியாளர்கள்

பதிவு அலுவலகம்
"கிரீன்லேண்ட்ஸ்"
8/28, ரேஸ் கோர்ஸ் ரோடு
அஞ்சல்பெட்டி எண் 1389
கோவை-641018

தொழிற்சாலை
ஆப்பக்கூடல் (அஞ்சல்)
வழி, ஜம்பை
ஈரோடு, ஆர். எம். எஸ்.
கோவை மாவட்டம்

...alsed, Printed at Peravai Achakam and Published by A. Narayanaswamy, B. A., for the Tamil Nadu Deivika Peravai at No. 9, Maharaja Surya Rao Road, Alwarpet, Madras-600018.